நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.
10, 11, 12 [illegible]
2009

01 - 01
3-10-2009
பக்கங்கள்: 24
விலை: 15/=

# Saturday மெயில்

සැටඩේ මේල්
A Fascinating Weekly Bulletin



# குற்றச்சாட்டை ஹிலாரி வாபஸ் பெறுவாரா?

இலங்கையில் போர் முடிவுக்கு வந்து நாலரை மாதங்களாகிவிட்ட போதிலும்கூட போருக்குப்பின்னரான நிலைவரங்களைக் கையாளும் விவகாரத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்துக்கும் மேற்குலகிற்கும் இடையிலான கருத்து முரண்பாடுகள் தீவிரமடைந்து கொண்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஹிலாரி கிளின்டன் இலங்கையில் பாலியல் வல்லுறவு ஒரு போர் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று தெரிவித்திருக்கும் கருத்தும் இக்கருத்துக்கு இலங்கை அரசாங்கத்தின் தரப்பில் வெளிக்காட்டப்பட்டு வரும் பிரதிபலிப்புகளும் இதைத் தெளிவாக உணர்த்துகின்றன.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் கடந்த புதன்கிழமை உரையாற்றிய ஹிலாரி கிளின்டன், பாலியல் வல்லுறவு ஒரு போர் ஆயுதமாகப் பால்கன் பிரதேசத்திலும் பர்மாவிலும் இலங்கையிலும் உலகின் வேறு பல பகுதிகளிலும் பயன்படுத்தப்பட்டதாகக் கூறியிருந்தார். பாலியல் வல்லுறவை போர் ஆயுதமாகப் பயன்படுத்துபவர்கள் சட்டத்தில் இருந்து விடுபாட்டு உரிமை பெற்றவர்கள் போன்று சுதந்திரமாக நடமாடக் கூடியதாக இருக்கும் சூழ்நிலை இத்தகைய குற்றச்செயல்களை ஊக்குவிக்கிறது" என்றும் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கூறியிருந்தார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தலைமைப்பதவி சுழற்சி முறையில் நாடுகளினால் வகிக்கப்படுகிறது. கடந்த மாதத்துக்கான தலைமைப் பதவியை அமெரிக்காவே வகித்தது. தலைமைப் பதவியின் இறுதிநாளான புதன்கிழமை பாதுகாப்புச் சபையின் கூட்டத்துக்கு தலைமை தாங்கிய வேளையில் ஹிலாரி கிளின்டன் பாலியல் வல்லுறவு தொடர்பான மேற்படி சர்ச்சைக்குரிய கருத்தைத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

எதிர்பார்க்கப்பட்டதைப் போன்றே இலங்கை அரசாங்கத்திடமிருந்து ஹிலாரியின் கருத்துக்கு கடுமையான கண்டனங்கள் கிளம்பியிருக்கின்றன. வெளியுறவு அமைச்சர் ரோஹித போகொல்லாகம நேற்றைய தினம் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா பட்டனிஸை தனது அமைச்சுக்கு அழைத்து அரசாங்கத்தின் கடுமையான ஆட்சேபத்தைத் தெரிவித்திருக்கிறார்.

முன்னதாக செய்தியாளர் மாநாடொன்றில் அரசாங்கத்தின் பாதுகாப்பு விவகாரப் பேச்சாளரும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சருமான


(2ஆம் பக்கம் பார்க்க)

**யாழ். குடாநாட்டு மக்களே,
தினக்குரல் குடும்பத்தின் புதிய வரவாக
இன்று முதல் உங்கள் கைகளில்
வாரம் ஒருமுறை தவழப்போகிறது
Saturday மெயில்**

Registered as a Newspaper at G.P.O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2050ஆம் ஆண்டளவில் உலகின் பட்டினிப் பட்டாளத்தில் இணையப்போகும் மேலும் 2 கோடி 50 இலட்சம் சிறுவர்கள்



காலநிலை மாற்றத்தின் விளைவாக உலகில் ஏற்படக்கூடிய உணவுத்தட்டுப்பாட்டினால் 2050 ஆம் ஆண்டளவில் (தற்போது பட்டினி கிடக்கும் சிறுவர்களையும் விட) மேலும் 2 கோடி 50 இலட்சம் சிறுவர்கள் பட்டினியால் வாடுவார்கள் என்று சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனம் அறிக்கையொன்றில் தெரிவித்திருக்கிறது.

உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்காக இந்த நிறுவனம் அறிக்கையைத் தயாரித்திருக்கிறது.

உலகின் அதிகப் பெரும்பான்மையான மக்களின் அன்றாட அடிப்படை உணவுவகைகளான அரிசி, கோதுமை, குரக்கன் வகைகள், சோயா போன்றவற்றின் விலைகள் கடுமையாக அதிகரிக்கும் என்றும் பூமி வெப்பமயமாதல் தடுக்கப்படாவிட்டால் உலகின் சகல பிராந்தியங்களுமே பாதிக்கப்படும். ஆனால், பயிர்விளைச்சலுக்கு ஏற்படக்கூடிய கடுமையான பாதிப்பினால் மோசமாக இடர்பாடுகளை எதிர்நோக்கப் போகும் பிராந்தியங்களாகத் தெற்காசியாவும் ஆபிரிக்காவின் தென்பகுதி நாடுகளுமே விளங்கும் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

2000 ஆம் ஆண்டில் உலகில் சராசரியாக சிறுவர்கள் உட்கொண்ட கலோரிகளையும் விட மிகக் குறைவான கலோரிகளையே 2050 ஆம் ஆண்டளவில் சிறுவர்கள் உண்ணப் போகிறார்கள். இதன் விளைவாகக் கடந்த பல தசாப்தங்களில் உலகில் சிறுவர்கள் மத்தியிலான போஷாக்குக் குறைபாட்டைப் போக்குவதற்கு மேற்கொள்ளப்பட்டுவந்த நடவடிக்கைகள் பயனற்றுப் போகக்கூடிய ஆபத்து தோன்றும் என்றும் சர்வதேச உணவுக்கொள்கை ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

காலநிலை மாற்றத்தின் விளைவாக உலகின் உணவு விநியோகம் மற்றும் விவசாயத் துறைச் செயற்பாடுகள் மீது ஏற்படக்கூடிய தாக்கங்கள் தொடர்பிலான கவலைக்குரிய மதிப்பீடாக இந்த அறிக்கை அமைந்திருக்கிறது.

கடந்த வருடம் தானிய வகைகளின் விலைகள் அதிகரித்ததால் ஹெய்டி தொடக்கம் தாய்லாந்து வரை அபிவிருத்தியடைந்துவரும் உலகெங்கும் கலகங்கள் மூண்டிருந்தன. அமெரிக்காவின் பிற்ஸ்பேர்க் நகரில் கடந்தவாரம் கூடிய ஜி-20 நாடுகளின் தலைவர்கள் உணவுப் பாதுகாப்புக்காக 200 கோடி டொலர்களை வழங்குவதாக உறுதியளித்தனர். அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையும் அடுத்த மாதம் உணவுப் பாதுகாப்பு தொடர்பான உச்சிமாநாடொன்றை நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்துவருகிறது. கடந்த வருடத்தைய உணவுக் கலகங்களுக்குப் பிறகு ஐ.நா.வினால் ஏற்பாடு செய்யப்படுகின்ற இரண்டாவது மாநாடு இதுவாகும்.

உணவுப் பாதுகாப்பு நெருக்கடிகளைத் தணிப்பதற்கு உலக வங்கியும் ஏனைய சர்வதேச நிறுவனங்களும் மேலும் கூடுதலான பங்களிப்புச் செய்யவேண்டும் என்று ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீ மூன் வலியுறுத்தியிருக்கிறார். கைத்தொழில்மய நாடுகள் விதை ஆராய்ச்சியில் முதலீடுகளை அதிகரிக்க வேண்டும் என்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் உள்ள சிறிய விவசாயிகளுக்கு கூடுதலான அளவுக்கு சமாளிக்கக் கூடிய வகையிலான பயிர் காப்புறுதியை வழங்க வேண்டும் என்றும் பான் கீ மூன் கேட்டிருக்கிறார். உணவு விலைகள் ஓரளவுக்கு தணிந்திருக்கின்ற போதிலும், உலகின் உணவு முறைமை இன்னமும் நெருக்கடியில் தான் இருக்கின்றது என்று கடந்த வார இறுதியில் செயலாளர் நாயகம் கூறியிருக்கிறார்.

பூமி வெப்பமடைதலுக்குப் புறம்பாக, அதிகரித்து வரும் சனத்தொகையும் உலகில் உணவுத் தட்டுப்பாட்டையும் உணவு விலை அதிகரிப்பையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.




ஜனவரி 30, 1948 அன்று இந்தியாவின் தேசபிதா மகாத்மா காந்தி கோட்சேயினால் சுட்டுக்கொல்லப்பட்டார். அவர் சுட்டுக் கொல்லப்படுவதற்கு ஒரு விநாடி முன் எடுக்கப்பட்ட புகைப்படம் இது. கோட்சே மகாத்மா காந்தியை சுடுவதற்கு தயாரான நிலையில் நிற்பதைக் காணலாம்.

## குற்றச்சாட்டை...

(முன்பக்கத் தொடர்ச்சி)

கெஹலிய ரம்புக்வெல ஹிலாரி கிளின்டனின் குற்றச்சாட்டை முற்றுமுழுதாக நிராகரித்து அமெரிக்க இராஜாங்க அமைச்சர் தெரிவித்ததைப் போன்ற குற்றச்சாட்டை விடுதலைப் புலிகள் கூட தெரிவித்ததில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அண்மைக்காலமாக மேற்குலகநாடுகள் இலங்கையின் உள்நாட்டுப் போரின் கடைசிக் காலகட்டத்தின் போதான நிகழ்வுகள் குறித்து தெரிவித்து வருகின்ற சந்தேகங்களுக்கும் முறைப்பாடுகளுக்கும் பதிலளிப்பதே இலங்கை வெளியுறவு அமைச்சரினதும் ஏனைய முக்கிய அமைச்சர்களினதும் முக்கியமான பணியாக மாறியிருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது. மேற்குலகிடமிருந்து வரும் விமர்சனங்களுக்கு உரிய முறையில் பதிலடி கொடுக்கத் தவறியமைக்காக அமைச்சர்களை ஜனாதிபதி ராஜபக்ஷ கடுமையாகக் கண்டித்ததாகவும் செய்திகள் வெளியாகின.

இலங்கையில் பாலியல் வல்லுறவு போர் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதாக தெரிவித்த குற்றச்சாட்டை ஹிலாரி கிளின்டன் வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று போகொல்லாகம அமெரிக்கத் தூதுவரிடம் கேட்டுக் கொண்டதாகத் தெரியவருகிறது. ஹிலாரி கிளின்டன் ஐ.நா. பாதுகாப்புச் சபைக் கூட்டத்திற்கு தலைமை தாங்கிய வேளையில் தெரிவித்த கருத்தொன்றை இலங்கையின் வற்புறுத்தலையடுத்து வாபஸ் பெறுவாரா என்பது முக்கியமானதொரு கேள்வி. ஆனால், அவர் அவ்வாறு செய்யாவிட்டால். அடுத்து இலங்கை அரசாங்கம் இந்த விவகாரத்தை எவ்வாறு கையாளும் என்பது ஏற்கெனவே சஞ்சலமானதாக இருக்கும் மேற்குலகுடனான இலங்கையின் உறவுகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘குடாநாட்டில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் குறித்து எமக்கு முறைப்பாடுகள் கிடைப்பதில்லை’

யாழ்.குடாநாட்டில் பல சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதாக யாழ். பொலிஸ் அத்தியட்சர் என்னிடம் தெரிவித்துள்ளார். எனினும் அது தொடர்பிலான முறைப்பாடுகள் எதுவும் எனக்குக் கிடைக்கவில்லை. அதேவேளை சிங்கள சமூகத்தை விடவும் தமிழ் சமூகத்தில் சிறுவர்களுக்கு பாதுகாப்பு அதிகமென நான் நம்புகின்றேன். இதற்கு அவர்களின் கலாசாரம், மதம் போன்றவை காரணமாக இருக்கலாமென தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைத் தலைவர் ஜகத் வெள்ளவத்தை தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டு சிறுவர்களின் உரிமைகள், துஷ்பிரயோகங்கள் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சிறுவர்களின் பாதுகாப்புத் தொடர்பில் எமக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவரின் செவ்வி வருமாறு;

**கேள்வி:** நாட்டில் அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுக்க எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் என்ன?

**பதில்:** வருடமொன்றில் பொதுவாக பொலிஸாருக்கும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக சுமார் 2,200 முறைப்பாடுகள் கிடைக்கும். எனினும் கடந்த வருடங்களில் பொலிஸின் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவுக்கு இது பற்றிக் கிடைத்த முறைப்பாடுகள் குறைவடைந்திருக்கின்றன. எனினும் அதிகார சபைக்கு கடந்த 2,3 ஆண்டுகளில் கிடைத்த முறைப்பாடுகள் அதிகம். அதிகாரசபைக்கு இவ்விடயத்தில் பல அதிகாரங்கள் இருக்கின்ற போதிலும் சிறுவர் துஷ்பிரயோக தடுப்பு நடவடிக்கைகளே முக்கிய தேவையாக இருக்கின்றது. நாம் அதற்குப் பாடசாலை, பொலிஸார், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, ஆட்டோ சாரதிகள், பாடசாலைச் சேவை வாகன சாரதிகள் என சம்பந்தப்பட்ட அனைத்து மட்டங்களிலும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதுடன் மேற்கொள்ளப் பட்டும் வருகின்றன. அத்துடன் சிறுவர் படையினரின் புனர்வாழ்வு மற்றும் ஒருங்கிணைப்புத் தொடர்பாக கொள்கையொன்றையும் நாம் தயாரித்திருந்தோம். அடுத்ததாக தேவையான சட்ட மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

**கேள்வி:** சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக பொலிஸாரின் செயற்பாடுகள் திருப்தியளிப்பதாக இருக்கின்றனவா?

**பதில்:** செய்யப்பட்ட முறைப்பாடுகளுக்குப் பொலிஸாரிடமிருந்து உரிய பெறுபேறுகள் கிடைக்கவில்லையென்று மக்களிடமிருந்து வந்த பல முறைப்பாடுகளை அடுத்தே 1998ஆம் ஆண்டில் அப்போதைய ஜனாதிபதியினால் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஸ்தாபிக்கப்பட்டது. இந்த அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருக்கும் பல அதிகாரங்களிலிருந்தே இதுவரை இருந்த நிறுவனங்கள் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் செயற்பட்ட விதம் போதுமானதாக இருக்கவில்லை என்ற சந்தேகம் தெளிவாகிறது. அது மட்டுமல்லாது தற்போது அதிகாரசபைக்கு வரும் முறைப்பாடுகளில் பெரும்பாலானவை கூட பொலிஸாரிடம் முறையிட்டுக் காலம் கடந்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதாகவே இருக்கின்றன. எனினும் இதற்குப் பொலிஸாரின் செயற்றிறன் இன்மையே காரணமெனக் கூறிவிட முடியாது. கடந்த காலங்களில் அவர்களுக்கு இருந்த அதிக வேலைப் பளு காரணமாக அதிகாரிகளை இந்த நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்த முடியாமல் போயிருக்கலாம். இவ்வாறான நிலைமைகளைக் குறைக்க தற்போதைய பொலிஸ் மா அதிபர் அக்கறையுடன் செயற்படுகின்றார். எனவே பெரும்பாலான இடங்களில் சாதகமான முன்னேற்றங்கள் தெரிகின்றன.

**கேள்வி:** சிறுவர் தொடர்பாக தற்போதிருக்கும் சட்டங்கள் முழுமையாக அமுல்படுத்தப்படுகின்றனவா?

**பதில்:** இலங்கையில் சிறந்த சட்டச் சூழலொன்று இருக்கிறது. எனினும் சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டியது அவசியம். எனினும் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதே பாரிய சிக்கலுக்குரிய விடயமாக இருக்கிறது. அதாவது சிறுவர் ஒருவர் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டால் அது தொடர்பான நீதிமன்ற விசாரணைகள் நடந்து முடிய பல வருடங்களாகி விடுகின்றன. இதற்கிடையே சம்பந்தப்பட்ட சிறுவனதும் பெற்றோரினதும் உணர்வுகளிலும் எண்ணங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டு விடுகின்றன. எனவே சட்டத்தை அமுல்படுத்துவதில் இருக்கும் சிக்கலால் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்களுக்கு அது இலகுவாகப் போய்விடுகிறது.

எனவே வழக்கின் தாமதத்தைக் குறைப்பது தொடர்பான சிபார்சுகளை முன்வைக்க

## ‘பல சம்பவங்கள் இடம்பெறுவதாக பொலிஸ் அத்தியட்சர் கூறுகிறார்’

நான் குழுவொன்றை நியமித்துள்ளேன். அதேபோல் சிறுவர் துஷ்பிரயோக குற்றவாளிகள் தொடர்பாகச் செயற்படுவதற்கான சட்ட முரண்பாடுகளைத் தீர்க்கவென நீதி அமைச்சினாலும் உயர் நீதிமன்ற நீதியரசர் சிராணி திலகவர்தன தலைமையில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான வழக்குகள் ஒரு வருடத்துக்குள் விசாரித்து தீர்ப்பு வழங்கப் படக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

**கேள்வி;** யாழ்.குடாநாட்டில் உங்களது செயற்பாடுகள் எந்தளவில் உள்ளன?

**பதில்:** அப்பிரதேசத்தில் பல துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதாக யாழ்ப்பாணம் பொலிஸ் அத்தியட்சர் என்னிடம் கூறியிருக்கிறார். எனினும், இது தொடர்பில் பொலிஸார் செயற்படாவிட்டாலும் கூட எமக்கு முறைப்பாடுகள் வருவதில்லை, அறியத் தரப்படுவதுமில்லை. எனினும், சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மட்டுமன்றி, சகல நிறுவனங்களும் அந்தப் பகுதிக்குச் செய்ய வேண்டிய சேவையைத் தாமதமின்றிச் செயற்படுத்த வேண்டும். அத்துடன், தமிழ் சமூகத்திடமிருந்து எமக்குக் கிடைக்கும் முறைப்பாடுகள் குறைவே. இதற்குக் காரணம் முறைப்பாடுகள் செய்யாமையா அல்லது அந்த சமூகத்தில் துஷ்பிரயோகங்கள் குறைவா என்பது எனக்குச் சரியாகத் தெரியாது. எனினும், சிங்கள சமூகத்தை விட தமிழ் சமூகத்தில் சிறுவர்களுக்கு இருக்கும் பாதுகாப்பு அதிகமென நான் நம்புகிறேன். இதற்கு கலாசார மற்றும் மத அடிப்படையிலான விடயங்கள் காரணமாக இருக்கலாம். நாம் வவுனியா இடம்பெயர்ந்தோர் முகாம்களில் பணியாற்றினோம். எமக்கு எந்தச் சம்பவங்கள் பற்றியும் அறியக் கிடைக்கவில்லை. எனினும், 2005 ஆம் ஆண்டில் கடல்கோள்(Tsunami) முகாம்களில் பல முறைப்பாடுகள் கிடைத்திருந்தன. சிறுவர் பாதுகாப்புக்குச் சாதகமாக சமூக கலாசாரம் உருவாகியிருக்கிறது. எனவே, உதாரணத்திற்கு ஐரோப்பா செல்லாமல் இங்கிருந்தே அதை எடுத்துக் கொண்டு அது தொடர்பில் கவனம் செலுத்திப் பின்னர் ஏனைய சமூகங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

**கேள்வி;** திருமலையில் வர்ஷா, மட்டக்களப்பில் தனுஷா போன்ற சிறுமிகள் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமை மற்றும் கொழும்பில் மலையகத்தைச் சேர்ந்த இரு சிறுமிகளின் மரணம் ஆகிய சம்பவங்கள் தொடர்பாக உங்களது நடவடிக்கைகள் என்ன?

**பதில்:** வர்ஷா படுகொலைச் சம்பவம் தொடர்பாக பாடசாலை தரப்பில் ஏதேனும் தவறு இருக்கிறதா என்பது தொடர்பான விசாரணைகளை நாம் மேற்கொண்டோம். ஆனால், அப்படி எதுவும் நடக்கவில்லை. மட்டக்களப்பு சம்பவம் தொடர்பாகவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மலையகச் சிறுமிகள் மரணத்தைப் பொறுத்தவரை இதுவரையான விசாரணைகள் வரை அவை தற்கொலையாகவே இருக்கின்றன. எனினும், குறைந்த வயதில் அவர்களை வேலைக்கு அமர்த்தியமைக்காக வீட்டு உரிமையாளர் அதிகார சபையின் நடவடிக்கைகளுக்கு அமைய நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். இதேநேரம், இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்களைத் தடுப்பதற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகமாக மலையக பகுதிகளிலிருந்து வெளி மாவட்டங்கள் சென்றிருக்கும் 14 வயதிற்கும் உட்பட்ட சிறுவர்கள் தொடர்பாக கணக்கெடுபொன்றும் நடத்தப் படுகிறது.

**கேள்வி:** முன்னாள் சிறுவர் போராளிகளுக்கான புனர்வாழ்வு மற்றும் முகாம்களிலுள்ள சிறுவர்களின் நலன்புரி விடயங்கள் தொடர்பாக அதிகார சபையினால் எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் என்னென்ன?

**பதில்:** சிறுவர் போராளிகள் தொடர்பாக தனியானதொரு சட்டத்தைக் கொண்டு வந்து கிரமமான சட்ட வரையறைக்குள் அவர்களை ஒரு வருட காலத்துக்குள் புனர்வாழ்வளிக்க நாம் எதிர்பார்க்கிறோம். நீதி அமைச்சுடன் இணைந்து அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

- டிட்டோ குகன்



## சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைத் தலைவர் ஜகத் வெள்ளவத்தை Saturday மெயிலின் முதல் இதழுக்கு செவ்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூகம்ப இடிபாடுகளுக்குள்ளிருந்து ஈனக்குரல்களின் ஓலம்

**ஜகார்த்தா:** இந்தோனேசியாவின் தென் சுமாத்ரா தீவை கடந்த புதன்கிழமை தாக்கிய கடும் பூமியதிர்ச்சியைத் தொடர்ந்து இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த மூன்று சிறுமிகள் நேற்று வெள்ளிக்கிழமை உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

படாங் நகரிலுள்ள பாடசாலையொன்றில் வகுப்புகளுக்கு சமுகமளித்திருந்த வேளையில், இப்பூகம்பம் ஏற்பட்டதனால், பாடசாலைக் கட்டிடம் இடிந்து வீழ்ந்ததுடன் இச்சிறுமிகள் நிலத்தின் கீழ் புதையுண்டு போயிருந்தனர்.

இதேவேளை, இவ் இடிபாடுகளுக்குள்ளிருந்து மேலும் பல பலவீனக் குரல்கள் கேட்டுக் கொண்டிருப்பதாக மீட்புக் குழுக்கள் தெரிவிக்கின்றன.

எனினும், இச் சிறுமிகள் மிகவும் ஆழத்தில் புதையுண்டிருப்பதால் இடிபாடுகளுடாக இவர்களுக்கு உணவோ குடிநீரோ வழங்க முடியாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ் வகுப்பறையிலிருந்த 11 சிறுமிகள் உயிரிழந்தமை ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ள சிறுமிகளின் அவலக்குரல்களுக்கு மத்தியில் அவ்விடத்தை சூழ்ந்திருந்து புகைப்பிடித்துக் கொண்டிருக்கும் குறிப்பிட்ட எண்ணிக்கையான படையினர் மீட்பு முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு கனரக இயந்திரங்கள் வரும்வரை காத்திருப்பதாக விளக்கம் கூறுவதாக செய்திச் சேவையொன்று விமர்சித்துள்ளது.

**லண்டன் ரைம்ஸ்**

## அழகுசாதனப் பொருட்களைப் பயன்படுத்தி வெடிகுண்டு தயாரிக்க முயன்றவர் கைது

அழகுசாதனப் பொருட்களிலுள்ள இரசாயனங்களைப் பயன்படுத்தி வெடிகுண்டு தயாரிக்க முயன்ற நபரொருவர் அமெரிக்காவில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்கப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ள நைபிபுல்லா ஜசி ஆப்கானிஸ்தானை சொந்த இடமாகக் கொண்டவர்.

அமெரிக்காவில் தொழில்புரிந்து வரும் இவருக்கு அல்-ஹைடாவுடன் நெருங்கிய தொடர்பு இருப்பதாகக் கருதப்படுவதுடன் இவரது தந்தையும் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜசியின் லப்டொப்பில் வீட்டு உபயோக மற்றும் அழகு சாதனப் பொருட்களிலிருந்து வெடிகுண்டு தயாரிப்பதற்கான ஒன்பது பக்க செயன்முறைக் குறிப்புகள் இருந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

விசாரணையின் போது ஜசி பல கடைகளில் அழகு சாதனப்பொருட்களை கொள்வனவு செய்தமை தெரியவந்துள்ளது.

ஜசியின் மனைவியும் குழந்தைகளும் பாகிஸ்தானிலேயே இருப்பதாகவும் கடந்த வருடம் பாகிஸ்தான் சென்ற ஜசிக்கு வெடிகுண்டு தயாரிக்கும் பயிற்சி வழங்கப்பட்டதாகவும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

குண்டு தயாரிப்பதற்கு பயன்படும் இரசாயனம் அதிகமுள்ள அழகு சாதனப்பொருட்களையே இவர் பெருமளவில் கொள்வனவு செய்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.



ஹங்கேரியின் புடாபெஸ்ட் நகரில் நடைபெற்ற ரற்றூ கண்காட்சியில் கலந்துகொண்ட பெண் ஒருவர்

# சர்வதேச வலம்

ச.துஷ்யந்தினி

## 'ஒபாமா கொல்லப்படுவாரா' பேஸ்புக் சர்ச்சையின் பின்னணியில் சிறுவன்

**வாஷிங்டன்:** அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கொல்லப்படுவாரா என்பது குறித்து பேஸ்புக் இணையத்தளத்தில் சிறுவன் ஒருவனே வாக்கெடுப்பு நடத்தியிருப்பதாக இரகசியப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

மேலும், சிறுவனின் குறும்புத்தனத்தாலேயே இவ்வாறு வாக்கெடுப்பு நடத்தப்பட்டதாகவும் இதனால் சிறுவன் மீது குற்றஞ்சுமத்தப்போவதில்லை எனவும் குறிப்பிட்ட இரகசியப் பொலிஸார் அச்சிறுவனின் பெயர் விபரங்களை வெளியிடவில்லை.

ஒபாமா கொல்லப்படுவாரா என கடந்த சனிக்கிழமை பேஸ்புக்கில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டதும் அவ்வாக்கெடுப்பு உடனடியாக நிறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில், இது குறித்த விசாரணைகளை மேற்கொண்டு வந்த இரகசியப் பொலிஸார் இச்சிறுவனின் குறும்புத்தனத்தால் ஏற்பட்டதென்பதைக் கண்டுபிடித்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து சிறுவனுடனும் பெற்றோருடனும் இரகசியப் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டனர்.

அதனைத் தொடர்ந்தே இரகசியப் பொலிஸார் இவ் வாக்கெடுப்பு தவறுதலாக நிகழ்ந்ததெனத் தெரிவித்துள்ளனர்.

**ரைம்ஸ் ஒவ் இந்தியா**


## 44 இலட்சம் ஆண்டுகள் பழைமையான மனித எலும்புக்கூடு 'அர்தி'


44 இலட்சம் ஆண்டுகள் பழைமையான எலும்புக்கூட்டின் எச்சங்கள்தான் இதுவரை கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூட்டில் மிகவும் பழைமை வாய்ந்ததென விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

அத்துடன் 1994 ஆம் ஆண்டில் எதியோப்பியாவில் தோண்டி எடுக்கப்பட்டிருந்த 1.2 மீற்றர் உயரமுடைய இந்த எலும்புக்கூடுதான் மனித பரிணாம வளர்ச்சியின் முதற்படியை தெளிவாக காட்டுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த எலும்புக்கூடுக்கு 'அர்தி' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதுவரை லூசி என்ற எலும்புக்கூடுதான் மிகவும் பழைமையான மனித மூதாதைய எச்சமெனக் கருதப்பட்டு வந்தது. ஆனால், அதனைவிட 10 இலட்சம் ஆண்டுகள் பழைமையானது 'அர்தி' என்பது ஆராய்ச்சிகள் மூலம் தெரியவந்துள்ளது.

**லண்டன் ரைம்ஸ்**





பிலிப்பைன்ஸில் வெள்ளத்துக்கு மத்தியிலும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியுள்ள மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹிட்லர் பங்கருக்குள் தற்கொலை செய்யவில்லை

ஜேர்மன் சர்வாதிகாரி அடொல்ப் ஹிட்லர் இரண்டாவது உலக மகாயுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் பதுங்குக் குழிக்குள் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்ததாகக் கூறப்படுவதை மரபணுப் பரிசோதனையொன்று தவறென்று நிரூபித்திருக்கிறதாம்.



ஹிட்லருடைய மண்டையோட்டுச் சிதைவுகள் என்று இதுநாள்வரை நம்பப்பட்டு வந்தவற்றை மரபணுப்பரிசோதனைக்கு உட்படுத்தியதில் அவை ஒரு பெண்ணினுடையவை என்று கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக லண்டன் டெயிலி மெயில் செய்தி வெளியிட்டிருக்கிறது.

ரஷ்யப் படைகளினால் தான் கைது செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காக ஹிட்லர் 1945 ஏப்ரில் 30 ஆம் திகதி நிலத்துக்கடியிலான காப்பரணுக்குள் வைத்து சயனைட்டை உட்கொண்டு தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டதாக சரித்திரவியலாளர்களும் விஞ்ஞானிகளும் நீண்ட காலமாக கூறிவருகிறார்கள்.

ஹிட்லருடையது என்று கூறப்படும் (துப்பாக்கிச் சன்னம் துளைத்த ஓட்டையுடனான) மண்டையோட்டின் பாகங்கள் அவரின் நிலத்தடி காப்பரணுக்கு வெளியே ரஷ்யப்படைகளினால் கண்டெடுக்கப்பட்டது. சோவியத் புலனாய்வுப் பிரிவினர் அதை பேணிப் பாதுகாத்து வந்தார்கள் என்று டெயிலி மெயில் கூறியிருக்கிறது.

ஆனால், மண்டையோட்டுச் சிதைவின் மீது அமெரிக்க விஞ்ஞானிகளினால் மேற்கொள்ளப்பட்ட மரபணுச் சோதனையில் அந்தச் சிதைவு 40 வயதுடைய பெண்ணுக்குரியவை என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. 1945 ஏப்ரிலில் ஹிட்லருக்கு 56 வயது.

'மண்டையோட்டுச் சிதைவு 20க்கும் 40 க்கும் இடைப்பட்ட வயதையுடைய ஒரு பெண்ணுக்குரியது என்பதே எமது முடிவாகும்' என்று கொனெக்ரிக்கட் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த அகழ்வாராய்ச்சி நிபுணர் நிக் பெலன்ரோனி கூறியிருக்கிறார்.

"ஷூம்பு மிகவும் மெல்லியதாக இருக்கிறது. ஆணின் எலும்பு கூடுதலான அளவுக்குக் கெட்டியானதாகவே இருக்கும். அத்துடன் மண்டையோட்டுத் தகடுகள் ஒருங்கே வருகின்ற பொருத்துவாய்கள் 40 வயதுக்கும் குறைவான ஒருவருடைய மண்டையோடே அது என்பதை நிரூபிக்கின்றன' என்றும் பெலன்ரோனி கூறியிருக்கிறார்.

பெலன்ரோனியின் சோதனை முடிவுகள் பற்றிய விபரங்கள் அமெரிக்காவில் தொலைக் காட்சிகளில் ஒளிபரப்பப்பட்டது. மரபணு நுண்மங்களை எடுப்பதற்காக மாஸ்கோவுக்குச் சென்றிருந்த அவரிடம் ஹிட்லரும் அவரது காதலியும் தங்களைத் தாங்களே சுட்டுத் தற்கொலை செய்துகொண்ட போது அமர்ந்திருந்ததாக நம்பப்படும் பாதுகாப்பு அரண் சோபாவின் இரத்தக்கறை படிந்த சிதைவுகள் காண்பிக்கப்பட்டன.

1945 இல் சோவியத்காரர்கள் எடுத்த சோபாவின் படங்கள் என்னிடம் இருக்கின்றன. சரியாக அதே இரத்தக்கறை படிந்த பலகையும் துணியும் எனக்கு காண்பிக்கப்பட்டன. இதன் மூலமாக நான் சரியான முடிவுக்கே வந்திருக்கிறேன் என்பது நிரூபிக்கப்படுகிறது என்று பெலன்ரோனி கூறியிருக்கிறார்.

# பொல்லாத பத்திரிகையாளர்கள்



பரிசுத்த பாப்பரசர் ஒரு தடவை வத்திக்கானில் இருந்து நியூயோர்க்கிற்கு தனது ஆயர்களில் ஒருவரை நல்லெண்ணத்தூதுவராக அனுப்பி வைத்தார்.

'அமெரிக்காவில் உள்ள பத்திரிகையாளர்கள் உங்களை சிக்கல்களில் மாட்டிவிடுவார்கள். அவர்களுடன் மிகவும் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளுங்கள்' என்று அந்த ஆயருக்கு பாப்பரசர் அறிவுரை கூறி அனுப்பவும் தவறவில்லை.

நியூயோர்க் விமான நிலையத்தில் ஆயர்கள் வந்திறங்கியதும் பெரும் எண்ணிக்கையான பத்திரிகையாளர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு அவரது நியூயோர்க் விஜயத்தின் நோக்கங்கள் குறித்தும் வேறு பல விடயங்கள் குறித்தும் கேள்விகளைக் கேட்கத்தொடங்கினார்கள்.

பாப்பரசர் கூறிய அறிவுரையை மனதிற்கொண்டு ஆயரும் கேள்விகளுக்கு நிதானமாகப் பதிலளித்துக்கொண்டிருந்தார். ஒரு நிருபர் 'உங்கள் நியூயோர்க் விஜயத்தின் போது இரவு விடுதிகளுக்குச் செல்லும் திட்டமெதுவும் இருக்கிறதா?' என்று கேட்டார்.

இக் கேள்வியை அடுத்து தடுமாறிய ஆயர் தன்னை சுதாகரித்துக் கொண்டு 'நியூயோர்க்கில் இரவு விடுதிகள் இருக்கின்றனவா' என்று பதிற்கேள்வி கொடுத்தார்.

அமெரிக்க பத்திரிகையாளர்களை ஒருவாறாகச் சமாளித்து விட்டதாக நினைத்துக்கொண்டு நியூயோர்க் விமான நிலையத்தை விட்டு வெளியேறிய ஆயருக்கு மறுநாள் காலை பெரும் அதிர்ச்சி காத்திருந்தது.


நியூயோர்க் நகரின் பெரும்பாலான பத்திரிகைகளில் முக்கிய தலைப்புச் செய்தி என்ன தெரியுமா? 'பாப்பரசரின் நல்லெண்ணத் தூதுவராக வந்த ஆயர் விமான நிலையத்தில் வந்திறங்கியதும் நியூயோர்க்கில் இரவு விடுதிகள் இருக்கின்றனவா' என்று நிருபர்களிடம் விசாரித்தார் என்பதே அச் செய்தியாகும்.


அமெரிக்கச் செய்தியாளர்களிடம் பேசும் போது மிகவும் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டுமென்று பாப்பரசர் கூறிய அறிவுரையை மீண்டும் நினைவு மீட்டிக் கொண்ட ஆயர் தன்னை நொந்து கொள்வதைத்தவிர வேறுவழியிருக்கவில்லை. பொல்லாத பத்திரிகையாளர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிக்க... சிந்திக்க...!









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குடியால் கெடும் குடாநாடு

யாழ். குடாநாட்டில் முன்னெப்போதுமில்லாத வகையில் குடிமகன்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கும் அதே வேளை, தற்போது தென்னிலங்கையிலிருந்து யாழ். குடாநாட்டுக்கு கொண்டுவரப்படும் பொருட்களில் மதுபானங்களே அதிகளவில் இடம்பிடித்துமுள்ளன.

முன்னைய காலங்களில் திருமணமாகாதவர்கள் மது அருந்துவதே அபூர்வமாக இருந்தது. ஆனால், தற்போது அரசினால் குடாநாட்டு மக்களுக்கு 'சுதந்திரம்' வழங்கப்பட்டுள்ளதால் 14, 15 வயது சிறுவர்கள் கூட இந்நாட்டின் 'குடிமகன்' களாக 'பார்' களிலும், விருந்துகளிலும் கலக்கிக் கொண்டிருக்கின்றனர்.

குடி குடியை கெடுக்கும் என்பது முதுமொழி. ஆனால், இன்று அதனை குடிப்பவன் தான் இந்நாட்டின் குடிமகன் என்று மாற்றிவிட்டார்கள்.

இன்றைய இளம்பராயத்தினர் மது என்றால் என்ன, அதன் விளைவுகள் எவை என்பதெல்லாம் தெரியாமலே அதற்கு அடிமையாகி விடுகின்றனர். எனவே, அவர்களுக்கு தெளிவூட்டுவதற்காக மதுவினால் ஏற்படும் தீமைகள் தொடர்பாக விளக்குகின்றோம்.

**மது என்றால் என்ன?**

அற்ஹஹோல் அல்லது சாராயம் சாதாரணமாக மக்களால் உட்கொள்ளப்படும் போதைப்பொருட்களில் ஒன்று. இது பெரும்பாலான சமுதாயங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதும் எளிதில் கிடைக்கக்கூடியதுமாகும். அற்ஹஹோல் பல்வேறு விதங்களில் தொழில்துறையில் பயன்படுத்தப்படுகிறது. மனிதர்களால் போதைப்பொருளாகக் குடிக்கப்படுவது (ஈதல் அற்ஹஹோல்) எனும் வகையாகும். இது தெளிந்த, நீர்த்த நிலையில் உள்ள ஒருவித எரியும் சுவையுடன் கூடிய திரவம். புளிக்க வைத்தல் மற்றும் காய்ச்சி வடிகட்டும் முறைகளில் இது தயாரிக்கப்படுகிறது.

**குடிநோய் என்றால் என்ன...?**

குடிநோய் என்பது தீவிரமான தொடர்ந்து உடல் மற்றும் மனப் பாதிப்பை ஏற்படுத்தி இறுதியில் மரணத்திற்கு வழிவகுக்கும் நோயாகும். அதன் முக்கிய அடையாளங்கள்.

1. குடிப்பதற்கான அடக்க முடியாத தீவிர வேட்கை எப்போதும் இருப்பது.

2.கட்டுப்பாடின்மை,குடிக்க ஆரம்பித்தவுடன் நிறுத்த முடியாமல் மேலும் மேலும் குடிப்பது.

3.உடல் பாதிப்புகள், குமட்டல்,வியர்வைப் பெருக்கம், நடுக்கம்,தேவையற்ற பரபரப்பு போன்ற விலகல் அடையாளங்கள் குடிப்பதை நிறுத்தினால் ஏற்படுவது.

4. மேலும் மேலும் அதிகமாகக் குடித்தால் மட்டுமே போதை ஏற்படுவது.

**குடிநோய் எந்தளவுக்கு அபாயமானது...?**

இலங்கையில் மரணத்தை விளைவிக்கும் முக்கிய காரணங்களில் குடிநோயும் ஒன்று. நம் நாட்டில் உள்ள மனநல சிகிச்சை மையங்களில் சேர்க்கப்படும் குடி தொடர்பான பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போவதைப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. இளம்பருவத்தினரிடையே முக்கியமாக மாணவர்களிடையே குடிப்பழக்கம் பெருகிவருவது கவலையளிப்பதாக உள்ளது. போதை காரணமாக ஏற்படும் பல்வேறு உடல்பாதிப்புகள், படிப்பில் ஆர்வமின்மை போன்றவை இதன் உடனடி விளைவுகள். இது இளைஞர்களின் முன்னேற்றத்திற்குரிய பெரும் தடையாக அமைந்துவிடுவதால் பல குடும்பங்களும் சமுதாயமும் வெகுவாகப் பாதிப்படைகின்றன.

**மக்கள் ஏன் குடிக்கிறார்கள்...?**

சிறிதளவு மதுவை உட்கொள்ளும் போது ஏற்படும் பின்வரும் குறுகியகால விளைவுகள், மக்களை வெகுவாக ஈர்த்துவிடுவதால் குடிப்பதை விரும்புகின்றனர்.

1. மன இறுக்கம் அகன்று ஒருவித தசைத் தளர்ச்சி ஏற்படுவது போன்ற உணர்வு ஏற்படுகிறது.

2. சுணக்கத்தை அகற்றி சுதந்திரமாக இருப்பது போன்ற உணர்வு ஏற்படுகின்றது.

3. பசி உண்டாகிறது.

4. வேதனை தரும் விடயங்களை மறக்க உதவுகிறது.

இவையனைத்தும் அப்போதைக்கு மட்டுமே என்பதை அறியத் தவறிவிடுகின்றனர்.

குடிப்பது தொடர்பாக மக்களிடையே பரவலாக இருந்துவரும் 'தவறான கருத்துகள்'

1.தினசரி சிறிதளவு மது அருந்துவது நல்லதும் பாதுகாப்பானதும் ஆகும். இந்த சிறிதளவு என்பது வரையறுக்கப்படாத ஒரு அளவு.

2.அற்ஹஹோல் அருந்தியவர் மாமிச உணவை உட்கொண்டுவிட்டால் எந்தவித உடல் பாதிப்பும் ஏற்படாது.

3.பியர் மற்றும் வைன் மது உடலுக்குத் தீங்கு விளைவிக்காது.

4.சிறிதளவு அற்ஹஹோல் உடலுக்கு நல்லது.

5.அற்ஹஹோல் பாலியல் உறவை மேலும் இன்பகரமானதாக ஆக்கும்.

6.குடிப்பதால் ஒருவர் தனது மனச்சோர்விலிருந்து விடுபட முடியும்.

7.குடித்துவிட்டால் மற்றவர்களுடன் நட்புடனும் தயக்கமின்றியும் பழக முடியும்.

8.குடித்தால் இரவில் நன்கு உறக்கம் வரும்.

9.உணவிற்கு முன்பு குடிப்பது பசியைத் தூண்டும்.

10.நண்பர்களை வருத்தமடையச் செய்வதைக் காட்டிலும் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க குடிப்பதே மேல்.

**குடிநோயின் உச்சம்**

1.மிகவும் அதிகமாகக் குடிப்பது.

2.ஒரே மூச்சில் குடிப்பது.

3.கடுமையான நடத்தை, கோபப்பட்டு கண்டபடி கத்துவது. சண்டையிடுவது.

4.எரிச்சலூட்டும் நடத்தை, தூக்கமின்மை, உணவை உட்கொள்ளாமல் இருப்பது.

5.குடிப்பதை நிறுத்த முயற்சித்தாலும் தோல்வியடைதல்.

6.திடீரென மாறும் மன நிலை.

7.இடையறாது குடித்தல்.

8.தனிமையில் குடித்தல்.

9.ஏற்கமுடியாத காரணங்களைக் கூறி மேலும் குடித்தல்.

மேற்கூறியவற்றில் சில பிரச்சினைகள் இருந்தாலே குடிப்பழக்கத்திற்கு அடிமையாகிவிட்டதை அறிய முடியும்.

**அற்ஹஹோல் ஒரு போதைப் பொருளா...?**

இதில் சந்தேகத்திற்கிடமே இல்லை. அற்ஹஹோல் குடித்தவுடன் விரைவிலேயே இரத்த ஓட்டத்தில் கலந்து விடுவதால் மூளைக்கும் செல்கிறது. இதன் விளைவே போதை எனப்படும் இயல்பான நடவடிக்கைகளிலிருந்து ஏற்படும் மாற்றங்கள். அற்ஹஹோல் ஊக்கமளித்துச் சோர்வை ஏற்படுத்தும் போதை மருந்தாகும்.




# குடிக்கத் தெரிந்த மனமே உனக்கு மறக்கத் தெரியாதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயமுறுத்தும் பயங்கர வெள்ளியும்

## பதற வைக்கும் 13 ஆம் திகதியும்



மேலை நாடுகளைப் பொறுத்தவரை 13 ஆம் நம்பர் என்றாலே பீதியுடன் பார்க்கும் நிலை உள்ளது. அதேபோலத்தான் வெள்ளிக்கிழமையும். இரண்டும் ஒன்றாக வந்தால் வினையே வேண்டாம். பயத்தின் எல்லைக்கே சென்றுவிடுவார்கள்.அந்த வரிசையில் வரும் நவம்பர் மாதம் இரண்டாவது வெள்ளிக்கிழமையும் 13 ஆம் திகதியும் ஒரே நாளில் வருகிறது.

இந்த ஆண்டில் வரும் மூன்றாவது சம்பவம் இது என்பதால் அமெரிக்கர்கள் குலை நடுங்கிப் போயுள்ளனர். ஆபத்தான சம்பவங்கள் நடக்கப்போகிறதே என்று இப்போதே அலறத் தொடங்கிவிட்டனர். கூட்டத் திகதியை மாற்றிவிடுங்கள்,விமான பயணங்களை இரத்துச் செய்யுங்கள், முக்கியமான முடிவுகளை எடுக்க வேண்டிய சந்திப்புகளை தள்ளிவையுங்கள்...என்று மக்கள் திட்டமிடத் துவங்கிவிட்டனர். இதை விடக் கொடுமை 13 ஆம் திகதி குழந்தை பிறப்பையும் தள்ளிப்போடுகின்றனர். இந்த மூடநம்பிக்கையை முறியடிப்பதற்காக அரசு இயந்திரங்கள் முடுக்கிவிடப்பட்டு உள்ளன என்றாலும் மக்களது மனோபாவத்தில் மாற்றமில்லை.

பெரும்பாலான நகரங்களில் 13 என்ற எண்ணே இருப்பதில்லை. அந்த எண் அமானுஷ்ய சக்தி கொண்டதாக இருக்குமாம். 13 ஆவது தெரு.,13 ஆவது அவென்யூ,அடுக்குமாடிக் குடியிருப்புகளில் 13 ஆவது தளம் என்று எல்லாவற்றிலும் 13 ஆம் எண் இருப்பதில்லை. ஆஸ்பத்திரிகளில் 13 ஆவது தளம், 13 ஆவது அறை கிடையாது. அங்கு உயிருக்கு உத்தரவாதம் இல்லையாம். விமான நிலையங்களிலும் 13 ஆவது கேட் கிடையாது. மொத்தத்தில் அந்த எண்ணையே தவிர்த்து விடுகின்றனர்.

13 ஆம் எண் மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்ற பயங்கர மூடநம்பிக்கை 19 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் உருவானது.அதற்கு முன்புவரை 13,ஆம் எண் என்பது துரதிர்ஷ்டமானது என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை.எதன் அடிப்படையில் மக்களிடையே பயஉணர்வு ஏற்பட்டது என்பதற்கு வரலாற்று ஆதாரங்களும் இல்லை. இதேபோல வெள்ளிக்கிழமையைக் கண்டாலும் அமெரிக்கர்கள் ஆடித்தான் போகின்றனர். இந்தக் கிழமையும் தங்களுக்கு ஒருவித ஃபோபியாவுக்கு ஆளாக்குவதாக குமுறுகின்றனர். ஆதாமும் ஏவாளும் வெள்ளிக்கிழமைதான் ஆப்பிளை கடித்து சாப்பிட்டனர்.இயேசு கிறிஸ்து வெள்ளிக்கிழமைதான் சிலுவையில் அறையப்பட்டார் என்கிறார்கள்.

விபத்துகளும், கொள்ளைச் சம்பவங்களும் வெள்ளிக்கிழமைகளில் மட்டும் அதிகமாக நடக்கின்றன என்கிறது அமெரிக்க புலனாய்வு அமைப்பான எஃப்.பி.ஐ. இது அமெரிக்கர்கள் மனதில் மேலும் கிலியை ஏற்படுத்தியுள்ளது.பிரிட்டிஷ் மெடிக்கல் ஜேர்னல் என்ற இதழ் வெளியிட்ட வெள்ளிக்கிழமை பற்றி ஆய்வு முடிவுகள் அமெரிக்கர்களின் அச்சத்தை மேலும் எகிறவைத்துள்ளது. 13 ஆம் திகதியும் வெள்ளிக்கிழமையும் இணைந்து வரும் நாட்களில் அதிகமானோர் உடல் உபாதைகளுக்கு ஆளாவதாகவும் இந்த நாளில் அதிகமான விதி விபத்துகள் நடப்பதாகவும் அந்த இதழின் ஆய்வு முடிவுகள் கூறுகின்றன. இயல்பாக நடந்த சில சம்பவங்கள் அமெரிக்கர்களிடையே இரத்த அழுத்தத்தை எகிற வைத்துள்ளன. புயலுக்கு பெயர் வைப்பது நம் பழக்கம்.அவற்றில் ஒன்று வெள்ளிக்கிழமை, 13ஆம் திகதி. இந்த புயல் 2006 ஆம் ஆண்டு அக்டோபர் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நியூயோர்க்கிலுள்ள பப்பல்லோ நகரை உலுக்கியது. புயலின் கோர தாண்டவத்தில் பொருட் சேதமும் உயிர்ச் சேதமும் ஏராளம். பாதிப்புகளில் இருந்து அந்த நகரம் மீண்டு வருவதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது.

சார்லி என்று பெயரிடப்பட்ட சூறாவளிக் காற்று தெற்கு புளோரிடா மாகாணத்தில் 2004 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மிகப்பெரிய அளவில் நிலச்சரிவை ஏற்படுத்தியது. இதில் பலர் உயிரிழந்தனர். இதேபோல் விமான விபத்துகளும் இதே திகதி இதே கிழமையில் அதிகம் நடந்துள்ளன. அமெரிக்காவில் வெள்ளிக்கிழமை 13 ஆம் திகதியில் முக்கிய நிகழ்ச்சிகள், கூட்டங்கள் இரத்துச் செய்யப்படுவதாலும் பயத்தாலும் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுவதாலும் அன்று ஒருநாள் மட்டும் 900 மில்லியன் டொலர் வர்த்தகம் முடங்கும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அமெரிக்காவின் கோடிக்கணக்கான பேரை 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை என்ற அமானுஷ்ய சக்தி ஆட்டிப்படைக்கிறது என்றார் பிரபல மனோதத்துவ நிபுணர் டொனால்டு டொஸ்சே.

மக்களிடையே உள்ள அறியாமையைப் போக்க அமெரிக்கா பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இருந்தாலும் வெள்ளிக்கிழமையும் 13 ஆம் திகதியும் சேர்ந்து வரும் நாளில் என்ன நடக்குமோ என்ற பதற்றம், படபடப்புடனேயே அமெரிக்கர்கள் இருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சீனக் கணவர்களின் சந்தேகம்

அயல் நாடுகளில் தற்போது ஒரு வனுக்கு ஒருத்தி என்ற நிலை வந்து கொண்டிருக்கும் நிலையில், குடும்ப முறை கடைப்பிடிக்கப்பட்டு வந்த நாடுகளில் ஒன்றான சீனாவில் ஒருவ னுக்கு ஒருத்தி என்ற நிலை சீரழிந்து கொண்டு வருகிறது.

இதற்கு ஒரே ஒரு உதாரணம் தான்... அதாவது, சீனாவில் பல ஆண்கள் தங்களது மனைவிகள் மீது சந்தேகப்ப டுகின்றனர். ஆனால், இப்படி சந்தே கப்படுவதில் ஒன்றும் தவறில்லை என்பது போல் அங்குள்ள மனைவிக ளும் நடந்து கொண்டுள்ளனர். நம்மூர் போல சந்தேகப்பட்டு மனைவியை அடித்து துன்புறுத்துவது, வீட்டிற்குள் வைத்து பூட்டுவது, தாய் வீட்டிற்கு விரட்டி விடுவது அல்லது கொலையே செய்வது போன்ற விஷயங்களில் சீன கணவன்கள் ஈடுபடுவதில்லை. புத்தி சாலித்தனமாக மனைவியை அழைத் துக் கொண்டு செல்லும் இடம் மரபணு பரிசோதனைக் கூடமாக இருக்கிறது.

தனது மனைவிக்கு பிறந்த அல்லது பிறக்கப்போகும் குழந்தை தன்னுடை யதுதானா என்பதை அறிய நிறைய ஆண்கள் தங்களது மனைவிகளை அல்லது காதலிகளை மரபணு பரிசே ாதனைக்கூடத்துக்கு அழைத்து வரு வது ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துக் கொண்டே வருகிறது என்று மரபணு மருத்துவர் தெரிவிக்கிறார். மரபணு சே ாதனை செய்தால் பிரச்சினை தீர்ந்துவி டும் என்று தான் நாம் நினைப்போம். ஆனால், அங்கு தான் பிரச்சினையே ஆரம்பமாகிறது. சந்தேகம் எங்கு வேண்டுமானாலும் வரும். ஆனால், தவறுதான் எங்கும் இருக்கக்கூடாது.

சீனக் குடும்ப முறைகளில் சந்தேக மும் தலை விரித்தாடுகிறது. தவறும் தாண்டவமாடுகிறது. இப்படி இருந் தால் எப்படி என்று புரியவில்லை. என்ன தவறு என்பது புரியவில் லையா? சீனாவில் மரபணு பரிசோ தனை முடிவில் 30 வீத குழந்தைகள் உண்மையான கணவன்களுக்கு பிறக்க வில்லை என்பது தான் அந்த அதிர்ச்சி யான முடிவாகும். அதாவது, சீன கண வன்மார்கள் 3 பேரில் ஒருவர் வேறு ஒருவரின் குழந்தையை தன் குழந்தை என்று சீராட்டி, பாராட்டி வளர்த்து வரு வது தெரிய வந்துள்ளது.

ரஜினி பட பாணியில் சொல்ல வேண்டும் என்றால், இது என் பொண் டாட்டிதான், ஆனால் இவளுக்கு பிறந்த குழந்தை என்னுடையது அல்ல என்றுதான் சீன கணவன்கள் தன்னு டைய குடும்பத்தை அறிமுகம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலை நாடு முழுவதும் பரவி யுள்ளது. குறிப்பாக தலைநகர் பெய் ஜிங்கில் உள்ள முன்னணி மகப்பேறு மையத்துக்கு மரபணு சோதனைக் காக வந்தவர்கள் எண்ணிக்கை இந்த ஓராண்டில் 20 வீதம் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. இதை கைரேகை அறிவியல் மைய விஞ்ஞானிகள் உறுதி செய்துள்ளனர்.

சீனாவில் உள்ள மரபணு சோதனை மைய ஊழியர் ஒருவரிடம் இது பற்றிக் கேட்டால், அவர் முகத்தை சுழித்த படி சொல்கிறார், இங்கு சோதனை செய்ய வரும் ஜோடிகளில் பலர் திருமணம் ஆகாதவர்கள். மணமாகும் முன்பே காதலி மீது சந்தேகப்பட்டு குழந்தைக்கு அப்பா யார் என அறிய வருகின்றனர். கடந்த ஆண்டில் 3,000 சோதனைகள் நடந்தன. இது முன்பை விட 20 சதவீதம் அதிகம். இங்கு வரும் ஆண்களிடம் பேசியதில், பெரும்பா லானவர்கள் தங்கள் மனைவிக்கு வேறு தொடர்பு இருப்பதாக சந்தேகிப்பது தெரிய வந்தது. நெருப்பில்லாமல் புகையாது என்பது போல சந்தேகங்கள் மரபணு முடிவில் ஊர்ஜிதமாகியுள்ளது என்றார்.

ஒரு தந்தை தனது மனைவிக்குப் பிறந்த/பிறக்கும் குழந்தை தன்னுடை யது அல்ல என்று தெரிந்தால் அவரது நடவடிக்கை எவ்வாறு உள்ளது என்று சமூக நல ஆர்வலரிடம் கேட்டதற்கு, மரபணு சோதனையில் தனது குழந் தைக்கு அப்பா வேறு ஒருவர் என்று தெரிந்தால், அந்த ஆண் தனது மனை வியிடம் இருந்து விவாகரத்து பெறுகி றான் அல்லது கருக்கலைப்பு செய்ய முடிவெடுக்கிறார்கள் என்று கூறினார்.

இந்த அதிர்ச்சிகளுக்கெல்லாம் ஒரு கிரீடம் வைத்தது போல மற்றொரு தகவலைக் கூறுகிறார் ஒரு முன்னணி மரபணு சோதனை மையத்தின் பொறுப்பாளர், அதாவது, மரபணு சோதனைக்காக ஆண்கள் மட்டும் தங்களது மனைவிகளை அழைத்து வரு வதில்லை. சில பெண்களும் தாங்களா கவே விரும்பி வருகிறார்கள். ஏன் என் றால், தங்களது வயிற்றில் யாருடைய வாரிசு வளர்கிறது என்பதை அறிந்து கொள்ளும் ஆர்வத்துடன் வருவதாக அவர்கள் கூறுகிறார்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் பற்றிய ஆச்சரியத் தகவல்கள்

நமது மனித உடல் பற்றிய பல தகவல்கள் தற்போதும் ஆராயப்பட்டு பல உண்மைகள் வெளி வந்து கொண்டிருக்கின்றன. அவை நமக்கு ஆச்சரியத்தையும் ஏன் அதிர்ச்சியையும் கூட ஏற்படுத்தும். அதுபோன்று நமது உடல் பற்றிய சில தகவல்கள் இங்கே...

பூரண ஆயுள் என்பது 120 வருடங்கள் ஆரோக்கியமாக வாழ்வது.

ஒருதலைமுறை என்பது 33 ஆண்டுகளைக் குறிக்கும்.

மனித முகத்தில் 14 எலும்புகள் உள்ளன.

மனித மூளையில் 6 கிராம் அளவிற்கு தாமிரம் உள்ளது.

ஒரு மனிதனின் உடலிலுள்ள நரம்புகளின் மொத்த நீளம் சுமார் 72 மீற்றராகும்.

நமது இரத்தம் ஒரே நாளில் 30 கோடி கி.மீ. பயணம் செய்கிறது.

நுரையீரல் ஒரு நாளைக்கு 23,040 முறைகள் சுவாசத்தை உள்ளெடுத்து வெளிச்செலுத்துகிறது.

நமது இதயம் ஒருநாளில் 1,03,689 முறை துடிக்கிறது.

மனிதனின் நாக்கில் உள்ள சுவை அறியும் செல்களின் எண்ணிக்கை மூவாயிரம்

உடலில் உள்ள மின்சாரத்தின் அளவு 25 வாட்ஸ்.

ஒரு சராசரி மனிதனின் உடலில் ஓடும் இரத்தத்தின் அளவு 5 லீற்றர்.

கைரேகையைப் போலவே நாக்கில் உள்ள வரிகளும் ஒவ்வொருவருக்கும் வேறுபடும்.

மனித உடலில் சதை அழுத்தம் அதிகம் உள்ள பகுதி நாக்கு.

கண் தானத்தில் கறுப்பு விழிகள் மட்டுமே அடுத்தவருக்கு பொருத்தப்படுகின்றன.

900 பென்சில்களை தயாரிக்கும் அளவிற்கு மனித உடலின் கார்பன் சத்து இருக்கிறது.

மனித உடலில் மிகவும் பலமானது விரல் நகங்களே. அதில் கெரடின் சத்து உள்ளது. இது கண்டாமிருகத்தின் கொம்புகளில் காணப்படுவது. மரணத்திற்குப்பிறகும் கூட நகம் ஒன்றுமே ஆகாது.




# விந்தை மிகு உயிரினங்கள்

உயிரினங்களில் பல்வேறு விசித்திர பழக்கங்களும், விந்தையான நடவடிக்கைகளும் உள்ளன. அவற்றில் சிலவற்றைப் பார்க்கலாம்.

மனித மூளையில் நினைவாற்றலுக்காக பத்தாயிரம் கோடி செல்கள் உள்ளன.

பிரஷ்டர்க்கி என்ற பறவையின் குஞ்சு முட்டையில் இருந்து வெளி வந்தவுடன் உடனே பறக்கத் தொடங்கிவிடும்.

மொராக்கோ நாட்டில் உள்ள கோஸ்லியா என்ற வகை ஆடுகள் மரத்தில் ஏறி இலைகளை பறித்து உண்ணும்.

குரங்கின் மூளை கீழ் பகுதி மூளை, மேல் பகுதி மூளை என இரு பகுதிகளாக இருக்கிறது.

எறும்புகள் நூறு நாட்கள் வரை இரையில்லாமல் உயிர் வாழுமாம்.

ஸ்விப்ட் என்ற பறவை மணிக்கு 170 கி.மீ. வேகத்தில் பறக்கும்.

நீரை உறிஞ்சிக் குடிக்கும் பறவை புறா.

ஒரே சமயத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட முட்டைகளை இடும் பறவை நெருப்புக் கோழி.

மிகப்பெரிய நீர்ப்பறவை அன்னம்.

வெட்டுக்கிளியை வேட்டையாடும் பறவை மைனா.

கூடுகட்டி வசிக்கும் பாம்பு ராஜநாகம்.

அணலி என்ற பாம்பின் தலை முக்கோண வடிவில் இருக்கும்.

சிட்டுக்குருவியின் இதயம் நிமிடத்திற்கு 1,000 முறை துடிக்கும்.

எறும்பு தன் எடையைப் போல 50 மடங்கு எடையை இழுக்கும் திறன் கொண்டது.

ஒட்டகம் சராசரியாக 60 நாட்கள் வரை தண்ணீர் குடிக்காமல் இருக்கும்.

திமிங்கலத்திற்கு 20 ஆயிரம் பற்கள் வரை முளைக்கும்

பூனைகளுக்கு இனிப்புச் சுவை தெரியாது.

மனித உடலில் மிகவும் கடினமான பகுதி பல்.

இரை தின்னும் போது கண்ணீர் வடிக்கும் உயிரினம் முதலை.

இமயமலையின் 8,000 மீற்றர் உயரத்தில் கூட ஒரு சாதாரண தேரையினம் உயிர் வாழ்வதாக கண்டறியப்பட்டுள்ளது.

## குறுக்கெழுத்துப் போட்டி - 01

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | ■ | 5 |
| 6 | 7 | 8 | 9 | ■ | 10 |
| 11 | 12 | 13 | 14 | ■ | 15 |
| 16 | ■ | ■ | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | ■ | 23 | ■ |
| ■ | 24 | ■ | 25 | 26 | 27 |

**இடமிருந்து வலம்**

1. சிலருக்கு இந்த நம்பிக்கை இல்லை.
6. உறவை இப்படியும் அழைக்கலாம்.(குழம்பியுள்ளது)
11. இது ஒரு கலை (குழம்பியுள்ளது)
17. கிழமைகளில் ஒன்று (குழம்பியுள்ளது)
20. இது அளவுகளில் ஒன்று
25. சிலர் இது கடிப்பார்கள்

**மேலிருந்து கீழ்**

1. அண்மையில் வெளிவந்த புதிய திரைப்படம்
2. நாக பாம்புக்கும் இதற்கும் தொடர்புண்டு. (குழம்பியுள்ளது)
3. ஆதாரக் கூறு (குழம்பியுள்ளது)
4. கிடங்கு என்றும் அழைப்பர் (குழம்பியுள்ளது)
5. மாரி காலத்தில் ஏற்படுவது தலைகீழ்
18. யானையை இவ்வாறு அழைக்கலாம் (குழம்பியுள்ளது)
21. இது போனால் சொல்லுப்போகும் (தலைகீழ்)

**உங்கள் விடைகளை**
**'Saturday மெயில்'**
**இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்**
**என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...**

## விடுகதைக்கு விடை தேடுங்கள்...

1. மட்டையுண்டு கட்டையில்லை; பூவுண்டு மணமில்லை. அது என்ன?
2. காய் காய்க்கும் பூ பூக்கும்; இலை இல்லை. அது என்ன?
3. கண்ணாடிக் குண்டு காற்றிலே பறக்குது; கையால் தொட்டால் காணாமல் போகுது. அது என்ன?
4. விதை இல்லாத செடி; மழையில் பிறந்து வெயிலில் காயுது. அது என்ன?
5. பச்சை உடை அணிந்திருப்பாள்; பசுந்தளிர் தின்றிடுவாள் .அது என்ன?
6. மாமன் வீட்டுத் தோட்டத்தில் மஞ்சள் குருவி ஊசலாடுது: அது என்ன?
7. ஓடும் ஆனால் இருக்கும் இடத்தை விட்டு நகராது. அது என்ன?
8. உழைக்க உழைக்க உடம்பெல்லாம் தோன்றும். அது என்ன?
9. உச்சியிலே பச்சைத் தோகை; உள்ளங்கையில் ரோமம். அது என்ன?
10. பகலெல்லாம் வெறுங்காடு; இரவெல்லாம் பூங்காடு. அது என்ன?
11. நடைக்கு உவமை; நளனுக்கு தூதுவன். அது என்ன?
12. நல்லவர் கொள்ளும் தானம்; நாலு பேருக்குத் தர முடியாத தானம். அது என்ன?
13. டாக்டர் வந்தாரு ஊசி போட்டாரு; காசு வாங்காமல் பறந்து போயிட்டாரு. அவர் யாரு?

விடைகள்:
1. வாழைமரம்
2. சப்பாத்திக் கள்ளி
3. நீர்க்குமிழி
4. காளான்
5. கிளி
6. எலுமிச்சம் பழம்
7. கடிகாரம்
8. வியர்வை
9. கரும்பு
10. வானம்
11. அன்னம்
12. நிதானம்
13. நுளம்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருட் குற்றம் தவிர்ப்போம்

காா.மு.சிதம்பரம்

அருந் தமிழில் உள்ள சொற்கள் அனைத்தும் ஆழமான பொருள் உடையவை. அத்தகைய சொற்களுள் ஒன்று 'அல்குல்' என்பது. இச்சொல் பெண்ணின் உறுப்புகளுள் ஒன்றைக் குறிக்கிறது. ஐந்து தமிழ் அகரமுதலிகளில் அல்குல் என்னும் சொல்லுக்கு 'பெண்குறி' என்று பொருள் தரப்பட்டுள்ளன. இப்பொருள் மிகவும் தவறானது.

உரைவேந்தர் ஔவை.சு.துரைசாமிப்பிள்ளை, புறநானூறு 344 ஆம் பாடலுக்கு எழுதியுள்ள உரையில், 'அல்குல் என்பது இடைக்கும் முழந்தாளுக்கும் இடைப்பகுதி ஆகும்' என்று குறிப்பிட்டுள்ளார். தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள சங்க இலக்கியப் பொருட் களஞ்சியம் என்னும் நூலிலும் இச்சொல்லுக்கு 'இடுப்பு உறுப்பு' என்றே பொருள் கூறப்பட்டுள்ளது.

உலகுக்கே அன்னையாக விளங்கும் உமையம்மையைப் பற்றிக் கூறும் போது, மாணிக்கவாசகர், 'பைந்நாகப் படவேரல்குல் உமை' என்றும், சுந்தரர், 'இழைநுழை துகில் அல்குல் ஏந்திழை' என்றும் திருநாவுக்கரசர், 'துடியிடை பரவை அல்குல் கொண்டை கொப்பளித்த கோதை' என்றும் குறிப்பிடுவதால், அல்குல் என்னும் சொல்லுக்கு முன்பு கூறிய பொருள் முற்றிலும் பொருந்தாது.

தலைவன், தலைவி அணிந்து கொள்ள மலர்களையும் தழைகளையும் தோழியிடம் கொடுக்கிறான். இத்தழைகள் எம் ஊரில் இல்லாததால் இவற்றைத் தலைவி தன் அல்குலில் அணிந்து கொண்டிருப்பதை எங்கள் வீட்டார் பார்த்தால் பல குற்றம் வரும் என்று கூறி தோழி ஏற்க மறுக்கிறாள்.

**'மல்குற்ற தண்புனல் சூழ்**
**தஞ்சை வாணன் மலய வெற்பா**
**நல்குற்றவையிந்த நாட்டுள**
**வன்மையின் நன்னுலதலாள்**
**அல்குற் றடத்தெமர் கண்டால்**
**அயிர்ப்பர் அதுவுமன்றி**
**பல்குற் றமும் வரும் யாங்கள்**
**வாங்கேம் பசுந்தழையே!'**
**தஞ்சைவாணன் கோவை-98**

இல்லத்தில் உள்ளவர்கள் சாதாரணமாகப் பார்க்கக்கூடிய உறுப்பாக இங்கு அல்குல் குறிக்கப்படுவதால் அது பெண்ணின் இடுப்புறுப்பு என்பது தெள்ளத் தெளிவு.

அகலிகையை ஏமாற்றி இன்பம் துய்த்த இந்திரனைச் சபித்த கௌதம முனிவர்,

**'ஆயிரம் மாதர்க் குள்ள**
**அறிகுறி உனக்குண்டாக'**

என்றுதான் கூறினாரே தவிர, அல்குல் என்று கூறவில்லை.

திருமணக் கோலத்தில் வந்த இராமனைக் காணப் பெண்கள் திரண்டிருக்கின்றனர். பின்னால் நின்று கொண்டிருக்கும் பெண்களுக்கு முன்னால் நிற்கும் பெண்களின் கூந்தலும் கொங்கைகளும் அல்குலும் இராமனை மறைக்கின்றன. அவற்றுக்கு இடையே இருந்த வழியாக அவர்கள் இராமனைக் கண்டு களித்தனர் என்று கம்பர் கூறுவதும் இக்கருத்தினையே வலியுறுத்துகிறது.

**'கருங்குழல் பாரம் வார்கொள்**
**கனமுலை கலைசூழ் அல்குல்**
**நெருங்கின மறைப்ப ஆண்டோர்**
**நீக்கிடம் பெறாது விம்மும்**
**பெருந்தடங் கண்ணி காணும்**
**பேரெழில் ஆசை தூண்ட**
**மருங்கலின் வெளிகளூடே**
**வள்ளலை நோக்குகின்றாள்'**

ஒரு தலைவியிடம் அவளது தோழி வினவுகிறாள் 'வானத்தில் ஆடும் மயிலைப்போல் நீ ஆடுவதற்கு நீ அமர்ந்துள்ள இந்த ஊஞ்சலை உன் அல்குலைப் பற்றி வேகமாக ஆட்டி விடட்டுமோ?' என்கிறாள்.

**'விசும்பாடு ஆய்மயில் கடுப்ப**
**யானின்று**
**பசுங்கால் அல்குல் பற்றுவனன் ஊக்கி**
**செலவுடன் வருகோ தோழி'**
**(நற்றிணை-222)**

ஊஞ்சலை ஆட்டுவோர், பின்னிருந்து ஊஞ்சலில் அமர்ந்திருப்பவரின் இடுப்புப் பகுதியைப் பிடித்து உந்துவதுதான் இயல்பானது. இவ்விடத்திலும் அல்குல் என்னும் சொல் இடுப்பு என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது.

வையை ஆற்றை வருணிக்கும் போது இளங்கோவடிகள்,

**'கொடுங்கரையாகிய அல்குலையும், வாலுகமாகிய முலையினையும் இதழாகிய சிவந்த வாயினையும், கயலாகிய கண்ணினையும் அறலாகிய கூந்தலினையும் முல்லையாகிய நகையினையும் உடைய பூங்கொடி'**
**(புறஞ்சேரியிறுத்த காதை-159-169)**

என்று கூறுகிறார். அல்குலை ஆற்றின் கரைகளுக்கு ஒப்பிட்டதால் அது இரண்டு பக்கங்களிலும் இருக்கக் கூடிய பகுதி என்பது தெளிவு. இச்சொல் பெண்ணின் இடையில் இருந்து முழந்தாள் வரையிலும் உள்ள பக்கவாட்டுப் பகுதியைக் குறிப்பது.

மன்னனுக்குக் கொடுப்பதற்காக கள்ளைப் பொற்கலத்திலே சுமந்து வருகிறாள் ஒரு பெண். கள் குடத்தின் சுமையைத் தாங்க முடியாமல் அவள் அல்குல் தளர்ந்தது என்று கூறப்பட்டுள்ளது. பெண்கள் குடம் சுமந்து வரும்போது அச்சுமை அவர்களது இடையை ஆதாரமாகக் கொண்டு தன் பாரத்தை அவர்களது இடுப்பில் இறக்கும் என்பது அனைவரும் அறிந்த செய்தி.

**'நாவஞ்சும் முள்**
**ளெயிற்று மகளிர்**
**அல்குல் தாங்கா அசைஇ**
**மெல்லென**
**கலங்கலந் தேறல் பொலங்கலத் தேந்தி**
**அமிழ்தென மடுப்ப மாந்தி'**
**(புற-361)**

சீதையைத் தன் தாயாகவே ஏற்றுக்கொண்ட அனுமனிடம் சீதையின் அங்க அடையாளங்களைக் கூறும்போது, இராமன் கூறியதாக ஒரு பாடல் உள்ளது.

**'வார்ஆழிக் கலசக்**
**கொங்கை**
**வஞ்சிபோல் மருங்குலாள்**
**தன்**
**தாரஆழிக் கலைசார் அல்**
**குல்**
**தடங்கடற் குவமை தக்**
**கோய்**
**பார்ஆழி பிடரில் தாங்கும்**
**பாந்தளும் பனிவென்றோங்**
**கும்**
**ஓர்ஆழித் தேரும் ஒவ்வா**
**உனக்குநான் உரைப்பது**
**என்னோ?'**

ஒரு பெண்ணுக்குரிய அடையாளமாக, அதுவும் ஒரு பக்தனிடம், 'அல்குல்' என்ற சொல் கூறப்படுவதால் அது பெண்குறி என்று கொள்ள முடியாது. இது காறும் கூறியவற்றால், அல்குல் என்பது பெண்ணின் இடுப்புப்பகுதி என்பது சந்தேகத்துக்கு இடமின்றிதெள்ளத் தெளிவாகிறது. இனி தமிழ் அறிஞர்களும், எழுத்தாளர்களும், கவிஞர்களும் தங்கள் படைப்புகளில் பெண்ணின் இடுப்புப்பகுதியை அல்குல் என்றே குறிப்பிட்டு அச்சொல் மீது படிந்துள்ள மாசினை நீக்க வேண்டும்.

இலக்கிய சுவை...

## ஒரு வார்த்தைக்கு இரு அர்த்தங்கள்

ஒரு சில வார்த்தைகள் இரண்டு அர்த்தங்களைக் கொடுக்கும். பயன்படுத்தும் இடத்திற்கேற்ப அதன் பொருள் அமையும்.

திங்கள்: மாதம், நிலவு, கிழமை.
ஆறு: நதி, எண்ணின் பெயர்.
இசை: சம்மதித்தல், சங்கீதம்.
மாலை: பூமாலை, பொழுது.
நகை: புன்சிரிப்பு, அணிகலன்.
மதி: அறிவு, நிலவு, மதித்தல்.
வேழம்: யானை, மூங்கில், கரும்பு.
மெய்: உண்மை, உடம்பு.
உடுக்கை: ஆடை, இசைக்கருவி.
அன்னம்: சோறு, பறவை.
நாண்: கயிறு, வெட்கப்படுதல்.
வேங்கை: புலி, ஒரு வகை மரம்.
ஞாயிறு: கிழமை, சூரியன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saturday சினிமா

# நல்ல பாடல்கள் காணாமல் போய்விடுகின்றன




'சில்லுனு ஒரு காதலில்', 'அன்பே வா முன்பே வா', 'வாரணம் ஆயிரம்' படத்தில் 'முன்தினம் பார்த்தேனே', 'பசங்க' படத்தில் ஒரு 'வெட்கம் வருதே வருதே' உட்பட ஏராளமான பாடல்களைப் பாடியவர் நரேஷ் ஐயர் இப்போது ''அங்காடித் தெரு'' 'அகம்புறம்', 'வர்ணம்', 'அகராதி' என பல படங்களில் விதவிதமான பாடல்களை பாடிக்கொண்டிருக்கிறார். அவரிடம் ஒரு சந்திப்பு.

**எந்த வகைப் பாடல் பாடுவது உங்களுக்குப் பிடிக்கும்?**

தமிழ் சினிமாவில் மெலடி,குத்துப் பாட்டு,கானா என பலவகை பாடல்களுக்கு இப்போது மவுசு உள்ளது. நான் அனைத்தையும் பாடியிருக்கிறேன். ஒரு குறிப்பிட்ட வகை பாடலைத்தான் பாடுவேன் என்று பாடகர் சொல்லக்கூடாது. அனைத்துவிதமான பாடல்களையும் பாடும் திறமை அவருக்குத்தேவை.இவரிடம் இந்தப் பாடலை கொடுத்தால் நன்றாகப் பாடுவார் என பெயர் எடுப்பதைவிட எந்தப் பாடலைக் கொடுத்தாலும் நன்றாகப் பாடுவார் என்ற பெயர்தான் முக்கியம்.

**மெலடி பாடல்கள் குறைந்து வருகிறதே?**

குறையவில்லை. குத்துப் பாடல்களுக்கு சமமாக மெலடி வருகிறது. ஆனால், நல்ல பல பாடல்கள் காணாமல் போய்விடுகிறது. இதற்கு சம்பந்தப்பட்ட படமும் காரணமாகிவிடுகிறது. நல்ல பாடலை சரியாகப் படம் பிடிக்காவிட்டால் கூட மக்களை அது கவர்வதில்லை. பாடல் நன்றாக இருந்து படம் ஓடாவிட்டாலும் அந்தப்பாடல் மக்களுக்குப் போய் சேர்கிறது. இதுபோன்ற காரணங்களால் பல நல்ல மெலடி பாடல்கள் தெரியாமல் போயுள்ளன.


**கஷ்டப்பட்டு பாடிய பாடல்?**

எல்லா பாடல்களையும் கஷ்டப்பட்டுதான் பாடுகிறேன். குறிப்பிட்டு சொல்வதென்றால் 'வரலாறு' படத்தில் ஏ.ஆர். ரகுமானின் இசையில் இன்னிசை அளபடையே பாடலை சொல்லலாம். இது செமி கிளாசிக்கல் பாடல் இத்தகைய பாடலை, ரகுமான் எனக்குத் தருவார் என எதிர்பார்க்கவில்லை. இது வித்தியாசமான பாடல், ராகம் சிறிது மாறினாலும் இசை மாறிவிடும். இதைக் கவனமாக பாடினேன். சில பாடல்களில் சரணம் எளிதாக இருக்கும், பல்லவி கஷ்டமாக இருக்கும். அதுபோல நிறைய பாடல்களை பாடியுள்ளேன்.

**இசை ...**

**யோசிக ...**

நிறைய இருக்கிறது. எனக்கு பிடித்த நிறைய பாடகர்கள் இருக்கிறார்கள். அவர்களின் பல பாடல்களை கேட்கும்போது ஆசை வரும்.ஆனால், அவர்கள் அளவுக்கு நான் பாடியிருப்பேனா என்பது தெரியாது.



'வேட்டைக்காரன்' விஜய்

## கமலுக்கு ஆசைப்படும் மோனிகா

நான் கமலின் விசிறி அவருடன் சதி லீலாவதி படத்தில் குட்டி வேடத்தில் நடத்திருந்தேன். இப்போது அவருக்கு ஜோடியாக நடிக்க ஆசையாக உள்ளது என்று கூறியுள்ளார் சிலந்தி புகழ் மோனிகா. பேபியாக பல படங்களில் நடித்தவர் மோனிகா. சிலந்தி படத்தில் அவர் காட்டிய கவர்ச்சி உச்சத்தை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். தற்போது பெருமளவில் கவர்ச்சியாக நடிப்பதைக் குறைத்துக்கொண்டு நடிக்க நல்ல வாய்ப்புள்ள படங்களாக பார்த்துப் பார்த்து நடித்து வருகிறார் மோனிகா. இந்த நிலையில் கமல்ஹாசனுடன் இணைந்து அவருக்கு ஜோடியாக நடிக்க ஆசைப்படுவதாக மோனிகா கூறியுள்ளார். இது குறித்து அவர் கூறுகையில்; எழுத்தாளர் ராஜேஷ்குமாரின் அகராதி படத்தில் நான் நடிக்கின்றேன். தமிழில் இரு படங்கள் உள்ளன. கன்னடத்திலும் ஒரு படத்தில் நடித்து வருகிறேன். கமலின் பரம இரசிகை நான். சதி லீலாவதி படத்தில் சின்ன வேடத்தில் நடித்திருந்தேன். ஆனால், அவருக்கு ஜோடியாக நடிக்க ஆசைப்படுகிறேன் என்றார் மோனிக்கா.

## மீண்டும் இணையும் பிரகாஷ்ராஜ் - ராதா மோகன்

மொழி என்ற வெற்றிப் படத்தை கொடுத்த பிரகாஷ் ராஜ் – ராதா மோகன் கூட்டணி மீண்டும் ஒரு படத்தில் இணைகிறார்கள். பிரகாஷ் ராஜின் டூயட் மூவிஸ் தயாரிப்பில் மட்டுமே படம் இயக்குவது என்பதில் உறுதியாக இருக்கும் ராதா மோகன் அடுத்து இயக்கவிருக்கும் படம் பயணம். தமிழ், தெலுங்கில் தயாராகவுள்ள இப்படத்தில் நாயகனாக நடிப்பவர் நடிகர் நாகர்ஜுன். அவருடன் இரு மொழிகளிலும் முக்கிய வேடத்தில் நடிக்கவிருக்கிறார் பிரகாஷ்ராஜ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேட்டைக்காரன் தீபாவளிக்கு வருமா?

ரசிகர்கள் மட்டுமல்ல விஜயே ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கும் வேட்டைக்காரன் திரைப்படம் தீபாவளிக்கு வருமா என்பது கேள்விக்குறியாகியுள்ளது. ஏ.வி.எம். நிறுவனத்தின் பாலசுப்பிரமணியம், குருநாத் தயாரித்துள்ள இந்தப் படத்தை சன் பிக்சர்ஸ் வாங்கி தனது பேனரில் வெளியிடுகிறது. ஆரம்பத்தில் இந்தப் படம் வருகிற தீபாவளிக்கு சூர்யாவின் ஆதவன் மற்றும் ஜெயம் ரவியின் பேராண்மை படங்களுடன் மோதும் எனக் கூறப்பட்டது. ஆனால் இன்னும் படத்தில் 10 சதவிகித படப்பிடிப்பும், ஒரு பாடல் காட்சியும் பாக்கியுள்ளதாம். இந்த வாரத்தில்தான் இந்தப் பாடல் காட்சி படமாகுமாம். காரணம் நாயகி அனுஷ்கா இப்போது சூர்யாவுடன் சிங்கம் படத்தில் பிஸியாகிவிட்டாராம். ஆனால் விஜய்க்கு தன் படம் எப்படியாவது தீபாவளியன்று திரையைத் தொட வேண்டும் என்பதில் தீராத விருப்பமாம். ஆனால் வேட்டைக்காரன் விடயத்தில் அவர் விருப்பம் இரண்டாம் பட்சம் தான். படத்தின் உரிமையாளர் சன் பிக்சர்ஸ் என்ன நினைக்கிறார்கள் என்பது தான் இப்போது முக்கியம். அவர்கள் கையில் ஏற்கனவே 'கண்டேன் காதலை' தயாராக உள்ளது.




## இறுதிக்கட்டத்தில் 'இராவணா'

தமிழ் மற்றும் இந்தி மொழிகளில் மணிரத்தினம் இயக்கும் அசோகவனம் (இந்தியில் இராவணா) திரைப்படம் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. இறுதிக்கட்ட படப்பிடிப்பு புனே அருகில் உள்ள மால்செச் மலைப்பகுதியில் நடைபெற்று வருகிறது. அபிஷேக் மற்றும் ஐஸ்வர்யா ராய், விக்ரம், பிரபு, கோவிந்தா, கார்த்திக் உள்ளிட்ட திரை நட்சத்திரங்கள் பங்கேற்ற பாடல் காட்சி பிரமாண்ட முறையில் படமாக்கப்பட்டது. இராவணா படக்குழுவில் தற்போது புதிதாக இணைந்திருக்கும் நடிகை பிபாசா பாசு ஆவார். நயன்தாரா முதலில் நடிக்க ஒப்பந்தமாகி, பின் இதிலிருந்து விலகியதால் பிபாசா பாசு இந்த படவாய்ப்பைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த படத்தில் வழக்கம் போல் பிபாசாவின் குத்தாட்டப் பாடல் இடம்பெறுகிறது என்பது கொசுறு தகவல்.

# கமலைப் பார்த்தே நடிப்பை கற்றேன் - ரஜினி

நடிகர் கமல்ஹாசன் சினிமா துறைக்கு வந்து 50 ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி விஜய் ரி.வி. அவருக்கு பிரமாண்ட பாராட்டு விழா நடத்தியது. இந்த விழாவில் ரஜினிகாந்த், மலையாள நடிகர் மம்முட்டி, தெலுங்கு நடிகர்கள் வெங்கடேஷ், அல்லு அர்ஜுன், இசையமைப்பாளர்கள் இளையராஜா, ஏ.ஆர்.ரகுமான், மற்றும் தமிழ் நடிகர், நடிகைகள் பலர் வாழ்த்திப்பேசினர்.இங்கு ரஜினி பேசியதாவது,

கம்லைப் பற்றி பேசவேண்டுமானால் 2 நாள் வேண்டும். 1975-களில் அவர் சூப்பர் ஸ்டாராக இருந்த காலங்களில் தான் நான் தமிழ் சினிமாவிற்குள் வந்தேன். நாங்கள் இணைந்தும் படங்களில் நடத்துக் கொண்டிருந்த காலம் அது இளமை ஊஞ்சலாடுகிறது, படத்தில் என்னை நடிக்க சிபாரிசு செய்தவரே கமல்தான். அவர் நினைத்திருந்தால் என்னை நடிக்க விடாமல் செய்திருக்க முடியும். நினைத்தாலே இனிக்கும் படம் தான் நாங்கள் இணைந்து நடித்த கடைசிப் படம். அப்போது கமல் என்னிடம் சொன்னார். ரஜினி நாம் இனிமேல் இணைந்து நடிக்க வேண்டாம். அப்படி நடித்தால் புகழ், பெயர் வாங்க முடியாது. நீங்கள் உங்களை வளர்த்துக் கொள்ளுங்கள். தமிழ் சினிமா உலகில் ஜாக்கிரதையாக இருங்கள் என்று கூறி என்னை உற்சாக மூட்டினார். இது மட்டுமல்ல, நாம் பிரிந்தாலும் என் படங்களில் உள்ள கலைஞர்களை நீங்கள் பயன்படுத்துங்கள். உங்கள் படங்களில் உள்ளவர்களை நான் பயன்படுத்துகிறேன் என்று கூறினார்.


சிரஞ்சீவி, அமிதாப், மம்முட்டி,மோகன்லால் எல்லோரும் நினைக்கலாம் கமல் என்ற சூப்பர் ஸ்டார் இருக்கும் போது ரஜினி எப்படி இவ்வளவு பெரிய ஹீரோவானான். நான் கமல் நடிப்பை பார்த்துத் தான் நடிப்பைக்கற்று இந்த அளவுக்கு முன்னேறி உள்ளேன்.குருநாதர் பாலச்சந்தர் எங்கள் 2 பேரையும் வைத்து இயக்கினார். அப்போது படப்பிடிப்பில் கமல் நடித்துக்கொண்டிருப்பார். நான் அவர் நடிப்பை பார்க்காமல் சிகரெட் பிடிக்க வெளியே சென்று விடுவேன். குருநாதர் என்னை தேடுவார். நான் வந்தவுடன் எங்கடா போனே 'தம் அடிக்கவா?' ஏன்டா கமல் நடிப்பை பாருடா நடிப்பை கத்துக்கோடா என்று கூறுவார். அதன் பிறகு கமல் நடிக்கும் போது அவரது நடிப்பை கவனித்தேன். தம் அடிக்க போகவேமாட்டேன்.

கமல் பாதை வேறமாதிரி. அதை நான் பின்பற்றாமல் எனக்கு வேற ரூட் ஒன்றை போட்டேன். கொஞ்சம் புத்தியை பயன்படுத்தினேன். நான் நடித்துக் கொண்டிருக்கும் எந்திரன் படம் கமல் நடிக்க வேண்டிய படம். அவருக்கு தான் ஷங்கர் ரெடி பண்ணினார். ஆனால் சில கால தாமதத்தால் இப்போது மாறிப் போய் உள்ளது. ஷங்கர் எந்திரன் பற்றி என்னிடம் கதையை சொல்லும் போது நான் நடிக்கமாட்டேன். இது கமலுக்காக தயார் செய்த கதை. அதில் என்னை கொண்டு வரமுடியாது என்றேன். ஆனால் ஷங்கர், சார் இது உங்களுக்காக வேறு மாதிரி செய்துள்ளேன் என்றார்.

கமல் உண்மையான (சகலகலா வல்லவன்). கலையரசி தாய் மம்முட்டி, மோகன்லால், சிரஞ்சீவி, வெங்கடேஷ் என்னை ஆகியோரை கைகளால் பிடித்து கொண்டுள்ளார். ஆனால் கமலை மட்டும் மார்போடு அணைத்து பாதுகாத்து உள்ளார். ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று நாங்களும் நடிகர்கள் தான் என்று கலையரசிடம் நான் கேட்டேன். அதற்கு அவர் சொன்னார்,நீ சினிமாவிற்கு வரவேண்டும் என்று இந்த ஜென்மத்தில் தான் ஆசைப்படுகிறாய். ஆனால் கமல் 10 ஜென்மத்திற்கு முன்பே இருந்து ஆசைப்பட்டு கொண்டிருக்கிறார் என்று கூறினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேற்றுக்கிரக வாசிகள் உள்ளனரா?

# ஆம் என பதில் தரும் இஸ்ரோ விஞ்ஞானிகள்

வேற்றுக்கிரக வாசிகள் இருக்கிறார்களா என்று மில்லியன் டொலர் கேள்விக்கு இஸ்ரோ விஞ்ஞானிகள் கிட்டத்தட்ட ஆம் என்று பதிலளித்து உள்ளனர். பூமிக்குச் சற்றும் சம்பந்தம் இல்லாத மூன்று புதிய வகை பக்றீரியாக்களை பூமியின் மேல் பகுதியில் அவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இஸ்ரோவின் இந்தக் கண்டுபிடிப்பு மூலம் பூமியைத் தாண்டி வேறு ஒரு கிரகத்தில் வேறு உயிரினங்கள் இருக்கலாம் என்ற வாதம் வலுப்படுத்தப்பட்டுள்ளது.

இஸ்ரோ கடந்த 2005 இல் 459 கிலோ நிறை கொண்ட பலூன் ஒன்றை விண்வெளி ஆராய்ச்சி தொடர்பாக பூமிக்கு மேல் 20 முதல் 41 கி.மீ. வரையிலான தூரத்தில் நிறுத்தியது. பின்னர் அந்த பலூன் பராசூட் மூலம் பூமிக்கு வந்தது.

அதில் ஒட்டியிருந்த பொருட்கள் பிரித்தெடுக்கப்பட்டு புனேவில் உள்ள தேசிய கல அறிவியல் ஆராய்ச்சி மையம் மற்றும் ஹைதராபாத்தில் உள்ள தொலைபேசி மற்றும் மாலிகுலர் அறிவியல் மையத்தில் வைத்து ஆராயப்பட்டது.

இந்த ஆராய்ச்சியின் முடிவில் இதுவரை பூமியில் அறியப்படாத மூன்று பக்றீரியாக்கள் விண்வெளியில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

புதிர் நிறைந்த பிரபஞ்சத்தில் பதிலளிக்க முடியாத கேள்விகள் ஒன்று வேற்றுக்கிரக வாசிகள் இருக்கிறார்களா இல்லையா என்பதுதான். இந்தக் கேள்விக்கு தனது புதிய கண்டுபிடிப்பின் மூலம் பதில் தந்துள்ளது இஸ்ரோ.

பூமிக்கு மேல் 40 கி.மீ. தூரத்தில் புற ஊதாக் கதிர்களில் இருந்து தப்பி உயிர் வாழ்வது என்பது எந்த உயிரினத்துக்கும் இயலாத காரியம் என்பதால் இந்த பக்றீரியாக்கள் விண்வெளியின் வேறு பகுதியிலிருந்து வந்திருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இந்த மூன்று பக்றீரியாக்களில் ஒன்றுக்கு பசில்லஸ் இஸ்ரோனேன்சிஸ் என இஸ்ரோவின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. மற்றொன்றுக்கு பாசில்லஸ் ஆர்யபட்டா என இந்திய வானசாஸ்திர முன்னோடி ஆர்யபட்டாவின் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. மூன்றாவது பக்றீரியாவுக்கு ஜேனிபாக்டர் ஹோய்லை எனப் பெயரிடப்பட்டுள்ளது.

விண்ணியல் விஞ்ஞானி பிரெட் ஹோயில் என்பவரின் நினைவாக இந்தப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இது குறித்து இஸ்ரோ கூறுகையில்;

புனே இன்டர் யுனிவர்சிட்டி பார் அஸ்ட்ரானமி அன்ட் பிசிக்ஸ் துறையைச் சேர்ந்த ஜெயந்த் நர்லிங்கர் இந்த ஆராய்ச்சியில் முக்கிய பங்கு வகித்தார். இஸ்ரோ விஞ்ஞானி யு.ஆர்.ராவ் மற்றும் பி.எம்.பர்கவா ஆகியோர் இவருக்கு இந்த ஆராய்ச்சியில் துணை நின்றனர் என்கிறது.

இந்நிலையில், இந்த பக்றீரியாக்கள் முன்பு பூமியில் உள்ள எரிமலைப் பகுதிகளில் வசித்திருக்கலாம். அவை எரிமலை வெடிப்பின்போது துகள்களுடன் சேர்ந்து விண்ணில் பறந்திருக்கலாம். பின்னர் அது அங்குள்ள சூழலுக்கு வாழப் பழகிக் கொண்டிருக்கலாம் எனவும் ஒரு கருத்து கூறப்படுகிறது.


எது எப்படியோ பூமிக்கு மேல் 40 கி.மீ. உயரத்தில் பக்றீரியா வாழ வழியிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. விண்வெளியில் வேற்றுக்கிரக வாசிகள் இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம் என்பதையே காட்டுகிறது.

இருப்பினும் விண்வெளியில் வேறு உயிரினம் இருக்கலாம் என்பதற்கான ஆதாரம் கண்டுபிடிக்கப்படுவது இது முதல் முறையல்ல. கடந்த ஆண்டு செவ்வாய்க் கிரகத்தில் திரவ நிலையில் தண்ணீர் இருப்பதை அமெரிக்காவின் பீனிக்ஸ் விண்கலம் கண்டுபிடித்தது.

அதேபோல 1989 ஆம் ஆண்டு நாசாவின் டிஸ்கவரி விண்கலத்தில் பயணித்த ஒரு விண்வெளி வீரர் வித்தியாசமான வேற்றுக்கிரக விண்கலத்தைப் பார்த்ததாகத் தெரிவித்தார்.

2004 ஆம் ஆண்டு மனிதனின் காலடியைப் போன்ற தடம் செவ்வாய்க் கிரகத்தில் இருப்பதை மார்ஸ் எக்ஸ்ப்ளோர் படம் பிடித்து அனுப்பியது. இப்போது பக்றீரியாக்கள் இருப்பதை இஸ்ரோ கண்டுபிடித்துள்ளதுடன் நிலவில் நீர் இருப்பதாக அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



# லண்டனில் நடந்த ஒரு விஞ்ஞானப் புரட்சி

மனிதனின் மிகப்பெரிய விஞ்ஞானப்புரட்சி ஒன்று லண்டனில் நடந்துள்ளது.

ஆம்....!

ஆணின் விந்துகளைச் செயற்கையாக உருவாக்கியுள்ளனர் விஞ்ஞானிகள். இதன் மூலம் குழந்தை பெற்றுக் கொள்ள முடியாத தம்பதிகள் வேறு ஒரு மாற்றானிடமிருந்து ஆண் விந்தைப் பெற்றுக் கொள்வதற்குப் பதில் செயற்கையாகப் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த மாற்றாரிடமிருந்து பெற்றுக் கொள்வதென்பதாலேயே பலர் அதை விரும்புவதில்லை. சரி விடயத்திற்கு வருவோம்....

இந்தக் கண்டுபிடிப்பினால் அந்த ஆண் விந்து வழமைபோல தலை, வால் என்பவற்றுடனே உருவாகியிருக்கிறது. வழமை போல இதற்கு எதிர்ப்புக் குரலும் ஒலிக்கத் தொடங்கிவிட்டது.

# விண்ணிலிருந்து பூமிக்கு மின்சாரம்

## கடும் முயற்சியில் அமெரிக்க விஞ்ஞானிகள்



பூமியில் தற்போது மின்சக்தி போன்ற எரிசக்தி ஆதாரங்களுக்கான தேவைகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. நிலக்கரி,பெற்றோல் போன்ற புதுப்பிக்க இயலாத எரிசக்தி ஆதாரங்கள் கூடிய விரைவில் காலாவதியாகிவிடும் அபாயம் இருக்கிறது.

நீர் மின்சாரம், அணுமின்சாரம், காற்றலைகள் மூலமாகக் கிடைக்கும் மின்சாரம் ஆகியவற்றின் அளவும் தற்போது போதுமானதாக இல்லை. இதனால் புதிய எரிசக்தி ஆதாரங்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் பல நாடுகளும் முனைப்புடன் ஈடுபட்டுள்ளன.

உலகத்திற்குத் தேவையான எரிசக்தியை அளிக்கும் சக்தி சூரியனுக்கு உண்டு என்று பலரும் ஒப்புக் கொண்டுள்ளனர். ஆனால் அதை எப்படி சிக்கனமான முறையில் சேமித்து பயன்படுத்துவது என்பதுதான் இதுவரை புரியாத புதிராக இருந்தது. இதற்கு விடை காணும் முயற்சியில் அமெரிக்காவின் கலிபோர்னியா மாநில அரசு நிறுவனமான 'பசுபிக் கேஸ்' வெற்றி பெற்றுள்ளது.

விண்வெளியில் சூரிய சக்தி சேமிப்பு நிலையங்களை செயற்கைக் கோள்கள் முலம் நிறுவி அவற்றின் மூலம் சூரிய சக்தியைச் சேமித்து பூமிக்கு அனுப்பி உபயோகிக்கும் முயற்சியில் அது தற்போது தீவிரமாக இறங்கியுள்ளது.

சூரிய சக்தி சேமிப்பு நிலையங்களை பூமியில்அமைப்பதற்கும்,விண்வெளியில் அமைப்பதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. மேகக் கூட்டங்களாலும்,கால நிலை மாற்றங்களாலும் பூமியில் அடிக்கடி சூரிய சக்தி சேமிப்பு பாதிக்கப்படுகிறது. மேலும் பூமிக்கு மேல் இருக்கும் பல்வேறு அடுக்குகள் சூரிய ஒளியை வடிகட்டி அனுப்புவதால் அதன் சக்தி முழுமையாக பூமியை வந்தடைவதில்லை. இது போன்ற பிரச்சினைகள் விண்வெளியில் இருப்பதில்லை.

செயற்கைக் கோள்களுடன் இணைக்கப்பட்ட சூரிய சக்தி சேமிப்பு நிலையங்களை விண்வெளியில் அமைப்பதன் மூலம் பூமியில் சேமிப்பதை விட பல்மடங்கு சூரிய சக்தியை சேமிக்க முடியும். செயற்கைக் கோள்களுடன் இணைக்கப்பட்டுள்ள பல கிலோ மீட்டர்கள் அளவிற்கு அகலமான கண்ணாடிகள் மூலம் சூரிய ஒளி பிரதிபலிக்கப்படுகிறது.

இப்படி பிரதிபலிக்கப்படும் சூரிய ஒளி செயற்கைக் கோள்களின் மற்றொரு புறத்தில் இணைக்கப்பட்டுள்ள போட்டோ எலக்ட்ரிக் சேமிப்புக் கலன்களில் (பேட்டரிகள்) சேமிக்கப்படுகிறது.

பின்னர் அது பூமியில் இருக்கும் ஆற்றல் மையங்களுக்கு நுண்ணலைகளாக அனுப்பப்படுகிறது. ஆற்றல் மையங்களில் நுண்ணலைகள் மின்சக்தியாக மாற்றப்படுகின்றன.

இந்த முறையில் மின்சக்தியை உற்பத்தி செய்வதால் மற்ற முறைகளில் இருப்பது போல எந்த வித்தியாசமான சுற்றுச் சூழல் சீர்கேடும் ஏற்படுவதில்லை என்பது இதன் சிறப்பம்சம் ஆகும். இதன் மூலம் சுமார் 200 மெகாவாட் அளவு மின் சக்தியை வரும் 2016-ம் ஆண்டிற்குள் தயாரிக்க முடியும் என்று அந்த நிறுவனம் நம்புகிறது. இந்த முறையில் மின்சாரம் உற்பத்தி செய்ய மிகக் குறைவாகவே செலவு பிடிக்கும்.

பெரிய அளவில் இந்த திட்டம் செயல்படுத்தப்படும்போது அது தற்போது உலகில் நிலவும் எரிசக்தி பற்றாக் குறைக்கு மிக பெரிய தீர்வாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இரண்டாவது தடவையாக ஜேர்மன் அதிபராகும்

# அஞ்ஜெலா மார்கெல்

உலக அரசியலில் தமது இருப்பினை எடுத்தியம்பும் வகையில் உள்ள பெண்களின் வரிசையில் ஜேர்மனியின் சான்ஸிலரான அஞ்ஜெலா மார்கெலும் ஒருவர்.

அரசியலில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட பெண்களில் அதிகளவானோர் ஆட்சி அதிகாரத்தின் உயர் பீடத்திலேயே இருப்பதை எம்மால் காணமுடிகின்றது.

இந்தியாவின் இந்திரா காந்தி, இலங்கையில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா மற்றும் அவரது புதல்வியாரான சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க, பாகிஸ்தானில் பெனாசிர் பூட்டோ, ஜேர்மனியில் அஞ்ஜெலா மார்கெல் என இப்பட்டியல் தொடரும்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஜேர்மனிய பொதுத் தேர்தலில் கன்சவேட்டிவ் கட்சி வெற்றியை பெற்றுள்ள நிலையில் சான்ஸிலர் அஞ்ஜெலா மார்கெல் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளார்.

ஜேர்மனியின் முதலாவது பெண் சான்ஸிலராக 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் திகதி பதவியேற்றுக்கொண்ட அஞ்ஜெலா மார்கெல் தற்பொழுது மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளமையானது அப்பெண்மணிக்கு அந்நாட்டில் மக்கள் வழங்கியிருக்கும் ஆதரவை காட்டுகின்றது.

இரண்டாவது தடவையாக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள சரித்திர நாயகி அஞ்ஜெலா மார்கெல் 1954 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 17ஆம் திகதி ஜேர்மனியின் ஹம்பேர்க் நகரில் ஹார்ஸ்ட் ஹாஸ்னர்–ஹேர்லிந்த ஜேஜெந் தம்பதிகளுக்கு மகளாகப் பிறந்தார்.

அன்றைய காலப்பகுதியில் கம்யூனிச ஆட்சியின் கீழ் இருந்த டெம்பிளின் நகரத்தில் தந்தையின் பணி நிமித்தம் இவர் அங்கு கல்வியைத் தொடர்ந்தார்.

லெப்சிக் பல்கலைக்கழகத்தில் பௌதீகவியல் பட்டப்படிப்பை முடித்து, அத்துறையில் கலாநிதிப் பட்டமும் பெற்றார். இந்நிலையில் இவர் கவனிப்பு இரசாயனவியலில் திரும்பியது.

கல்வியின் பின்னர் அஞ்ஜெலா மார்கெலின் திருமணவாழ்வு, அதனைத் தொடர்ந்து 1989 இல் அன்றைய கம்யூனிச ஆட்சிக்கெதிரான ஜனநாயகப் புரட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார். மேற்கு, கிழக்கு ஜேர்மனிகளை பிரித்த பேர்ளின் சுவர் அழிப்பின் பின்னர் ஜனநாயக விழிப்புணர்வு என்ற கட்சியில் தன்னை இணைத்துக்கொண்டார்.

1977 இல் உல்ரிச் மார்கெல் என்ற பௌதிகவியல் ஆராய்ச்சியாளரை அஞ்ஜெலா மணம் முடித்திருந்தார். ஆனால், 1982 ஆம் ஆண்டில் அவரை விவாகரத்து செய்து இரசாயனவியல் ஆராய்ச்சியாளரான ஜொக்கெம் என்பவரை மணம் முடித்திருந்தும் இரு திருமணங்கள் மூலமும் இவர் குழந்தைகளைப் பெற்றிருக்கவில்லை.

கிழக்கு ஜேர்மனியில் நடைபெற்ற முதலாவது ஜனநாயகத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றதன் மூலம் அந்த அரசின் பேச்சாளராக நியமிக்கப்பட்டார்.

அத்துடன் பிரிவடைந்திருந்த இரு ஜேர்மனிகளும் ஒன்றாக்கப்படும்போது நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்று பிரபலம் உள்ள இளம் அரசியல் தலைவர்களில் ஒருவரானார்.

1998 இல் இவரது கட்சி தோற்கடிக்கப்பட்ட போது கட்சியின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார் அஞ்ஜெலா மார்கெல். அதன் பின்னர் நடைபெற்ற 6 பொதுத் தேர்தல்களின் வெற்றியின் பின்னணியில் இவர் இருந்தது இவரது கட்சிக்குள் இவருக்கு இருந்த செல்வாக்கை உயர்த்தியது.

தனது கட்சித் தலைவரான ஹெல்மட் கோலை பகிரங்கமாக விமர்சித்தது மட்டுமல்லாமல் தமது கட்சி வெற்றி பெற வேண்டுமானால் கோல் கட்சியில் அங்கம் வகிக்கக் கூடாதெனவும் வலியுறுத்தி வாதிட்டார்.

இதன் பின்னர் கட்சியின் தலைமைப் பீடத்தை 2000 ஆம் ஆண்டில் கைப்பற்றியிருந்தாலும் பாராளுமன்றத்தில் கட்சிக்கு தலைமை வகிக்க இவரால் முடியவில்லை.

இதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சியின் தலைமைப் பதவி வகித்து பின்னர் 2005 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று சான்ஸிலராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அரசியலில் பொருளாதார விரிவாக்கத்தை ஆதரிக்கும் இவர் அமெரிக்க அரசுடன் உறவை வலுப்படுத்த வேண்டுமென்பதில் தீவிரமாக இருந்ததுடன் ஈராக் மீதான அமெரிக்கப் படை எடுப்புக்கு தனது ஆதரவையும் வழங்கியிருந்தார். மேலும் இஸ்லாமிய மதத்தின் ஆதிக்கம் ஐரோப்பாவுக்குப் பரவி விடும் என்பதால் துருக்கி ஐரோப்பிய ஒன்றியத்துக்குப் பிரவேசிப்பதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

இவ்வாறாக கடந்த 4 வருட கால ஆட்சிக் காலத்தில் பல கொள்கை மாற்றங்கள், அபிவிருத்தித் திட்டங்களை அஞ்ஜெலா மார்கெல் முன்னெடுத்திருந்தார்.

இவரின் திட்டங்களால் ஜேர்மனி மக்களில் மட்டுமன்றி உலகத் தலைவர்கள், உலக மக்களிடமும் செல்வாக்கைப் பெற்றிருந்தார்.

இந்நிலையில் இரண்டாவது தடவையும் ஆட்சி பீடத்தை தன்வசப்படுத்தியுள்ள அஞ்ஜெலா மார்கெல் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முன்னுரிமை அளிக்கப்படுமெனத் தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் இவரின் முன்னைய கூட்டணிக் கட்சியான எஸ்.பி.டி. படுதோல்வி அடைந்துள்ள நிலையில் கூட்டணி ஆட்சி அமைப்பதற்காக எவ்.டி.பி. கட்சியுடன் அஞ்ஜெலா மார்கெல் பேச்சுகளை ஆரம்பிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கூட்டணியானது பொருளாதார மீட்சிக்கு வழிவகுக்குமெனவும் அஞ்ஜெலா தெரிவித்துள்ளார்.

தேர்தலில் வெற்றி பெற்றுள்ள அஞ்ஜெலா மார்கெலுக்கு உலகத் தலைவர்கள் பலரும் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். பிரான்ஸ் மன்னன் லூயிஸ் பிலிப்பின் ஆட்சியைக் கவிழ்க்க மகளிர் புரட்சி நடைபெற்று 219 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் தற்போது உலக அரசியலில் பெண்களின் பங்கு அதிகரித்து வருகின்றது.

தமக்கு சம உரிமை வழங்கப்பட வேண்டுமென போராடிய பெண்கள் இன்று அரசுகள் பலவற்றின் தலைமைப் பதவியில் உள்ளனர்.

இது ஒரு சிறந்த மாற்றமாக இருந்தாலும் ஒரு சில நாடுகளில் பெண்கள் அரசியலில் ஈடுபடுவது குறைவாகவேயுள்ளது. இந்த நிலை மாறி கூடுதலானளவில் பெண்களும் பாராளுமன்றத்துக்குப் பிரவேசிக்க வேண்டும்.

உலகில் வரலாறு படைத்த பெண்களின் பட்டியலில் இன்னொரு மைல்கல்லாகத் திகழும் அஞ்ஜெலா மார்கெல் தனது இரண்டாவது பதவிக் காலத்தில் செய்யப் போவது என்ன?


உலகின் அதிகாரம் மிக்க பெண்மணியாகத் தொடர்ந்து நான்காவது வருடமாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ள அஞ்ஜெலா மார்கெல் ஜேர்மனியின் சான்ஸிலராகவும் இரண்டாவது தடவையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், ஜேர்மனியின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பப் போவதாக தனது தேர்தல் வெற்றியின் பின் அறிவித்துள்ள அஞ்ஜெலா மார்கெலின் இரண்டாவது பதவிக் காலச் செயற்பாடுகள் எவ்வாறு அமையப் போகின்றது என்பதை அறியக் காத்திருக்க வேண்டியுள்ளது.

யோ.நிமல்ராஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸ்ட்ரோவின் கள்ளக் காதலிகள்



பிரபல்யமான உலகத் தலைவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை பற்றி பலவிடயங்கள் பகிரங்கத்துக்கு வராமலே போய்விடுகின்றன. அத்தகைய விடயங்களை அறிவதில் எப்போதுமே மக்கள் ஆர்வம் காட்டவும் தவறுவதில்லை.

கியூபா ஜனாதிபதியாக இருந்த பிடல் காஸ்ட்ரோவின் தனிப்பட்டவாழ்க்கையின் நிகழ்வுகளைத் தொகுத்து ஒரு நூலாக விரைவில் வெளியிடவிருக்கிறார் புலனாய்வுப் பத்திரிகையாளரான லண்டனைச் சேர்ந்த ஆன் லூயிபார்டாச். காஸ்ட்ரோவின் தனிப்பட்டவாழ்க்கை பற்றிய தகவல்களை கியூபாவின் அரச கட்டுப்பாட்டில் உள்ள ஊடகங்களில் வெளியிடமுடியாது. அது எப்போதுமே தடைசெய்யப்பட்ட விவகாரமாகவே இருந்துவருகிறது.

காஸ்ட்ரோவினதும் அவரது இளைய சகோதரரான தற்போதைய ஜனாதிபதி ராவுல் காஸ்ட்ரோவினதும் வாழ்க்கை பற்றிய அந்த நூலில் ஆன் லூயிபார்டாச் காஸ்ட்ரோவுக்கு இருந்த கள்ளக்காதல் தொடர்புகள் குறித்தும் பிறந்த பிள்ளைகள் குறித்தும் தகவல்கள் அம்பலப்படுத்தப்படுவதாக 'த டெயிலி ரெலிகிராவ்' பத்திரிகை இவ்வாரம் செய்தி வெளியிட்டிருக்கிறது.

தற்போது 83 வயதை அடைந்து விட்டபிடல் காஸ்ட்ரோவுக்கு பல பெண்களுடனான தொடர்பு மூலமாக குறைந்தது 10 பிள்ளைகளாவது இருக்கிறார்களாம். காஸ்ட்ரோவுடன் காதல் தொடர்பு கொண்டிருந்த எந்தப் பெண்ணும் அவருடன் சேர்ந்து நிற்கும் புகைப்படம் எதுவுமே வெளியானதில்லை.

காஸ்ட்ரோவின் முதல் மனைவியான மைர்ட்டா டயஸ் பாலார்ட்டுக்கு 1949 ஆம் ஆண்டு முதல் குழந்தை பிறந்தது அந்தப்பிள்ளைக்கு பிடல் டிட்டோ (சின்னச் சிறு பிடல்) என்று பெயர் சூட்டப்பட்டது. பின்னர் 1962-1974 காலகட்டத்தில் அவரது காதலியான டலியா சோடோ டெல் வாலேயுக்கு 5 ஆண் குழந்தைகள் பிறந்தன. இந்தப் பெண்மணியை காஸ்ட்ரோ பின்னர் 1980 ஆம் ஆண்டில் இரகசியத்திருமணம் செய்து கொண்டதாகக் கூறப்படுகிறது. வாலேயை மக்கள் பகிரங்கத்தில் கண்டதில்லை.

காஸ்ட்ரோவுக்கு இவரைவிடவும் வேறுபல காதலிகளும் இருந்தார்களாம். அவர்களுடனான உறவின் மூலமாக பல பிள்ளைகள் பிறந்ததாகவும் கூறப்படுகிறது. தோல்வி கண்ட கிளர்ச்சிக்குப்பிறகு சிறையில் அடைக்கப்பட்ட 29 வயதான காஸ்ட்ரோ 1955 ஆம் ஆண்டு விடுதலையானதும் ஒருகாதலியுடனானதொடர்பு மூலம் குழந்தையொன்று பிறந்தது. வேறு மூன்று பெண்களுடனான தொடர்பு மூலமாக மூன்று காஸ்ட்ரோவாரிசுகள் 1956 ஆம் ஆண்டு பிறந்ததாகவும் இந்தக் காதலிகளில் உயர்குடியைச் சேர்ந்த அழகியான நடாலியா றிவெல்டா மிகவும் பிரபல்யமானவர். காஸ்ட்ரோவுக்கும் இவருக்கும் பிறந்த மகளுக்குப்பெயர் அலினா பெர்னாண்டஸ். றிவெல்டா உயர்குடியைச் சேர்ந்தவரானாலும் காஸ்ட்ரோவின் கம்யூனிஸ்ட் புரட்சியை கடுமையாக ஆதரித்தவர் என்று அந்த நூலில் தகவல் தெரிவிக்கப்படுவதாக 'த டெயிலி ரெலிகிராவ்' கூறியிருக்கிறது.

ஆக ஒட்டுமொத்தத்தில் காஸ்ட்ரோ பெண்கள் விடயத்தில் நம்பத்தகுந்தவர் அல்லவென்று உலகிற்கு கூறுவதற்கே மேற்படி நூல் மூலமாக முயற்சிக்கப்படுகிறது. லத்தீன் மொழியிலே காஸ்ட்ரோவின் முதற்பெயரான பிடலுக்கு அர்த்தம் என்ன தெரியுமா?

நம்பத்தகுந்தவர் என்பது தான்.

# பட்டகடனை தீர்க்க சிறுநீரகங்களை விற்பனை செய்ய முன்வரும் பிரிட்டிஷ் வாசிகள்

பட்டகடனைத் திருப்பிக் கொடுப்பதற்கு பணத்துக்குத் தவிக்கும் பல பிரிட்டிஷ் வாசிகள் தங்களது சிறுநீரகத்தை 25 ஆயிரம் பவுண்களுக்கும் அல்லது அதற்கும் கூடுதலான பணத்துக்கும் விற்பனை செய்வதற்கு முன்வந்திருப்பதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறுநீரகங்களை விற்பனை செய்வதற்கான விளம்பரங்களை இணையத்தில் இவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். இவ்வாறு இணையத்தில் விளம்பரங்களைச் செய்தவர்களில் ஐவர் சிறுநீரகம் தேவைப்படும் நோயாளிகளின் உறவினர்கள் என்றும் நண்பர்கள் என்றும் கூறிக் கொண்டு விற்பனை சம்பந்தமாகப் பேரம்பேச வந்த செய்தியாளர்களைச் சந்தித்ததாக லண்டன் சண்டே ரைம்ஸ் பத்திரிகை கடந்தவாரம் செய்திவெளியிட்டிருந்தது.

சிறுநீரகத்தை விற்பனை செய்ய முன்வந்தவர்களில் ஒருவர் மனநோய் மருத்துவமனையில் ஆண் தாதியாகப் பணியாற்றுகிறார். 26 வயதான இவர் தனது வியாபாரம் நஷ்டமடைந்ததையடுத்து கடனைத் திருப்பிக் கொடுக்க தனக்கு பணம் அவசரமாகத் தேவைப்படுகிறது என்கிறாராம். இன்னொருவர் லங்காஷயரைச் சேர்ந்த டாக்ஸி சாரதி. அடகுவைத்த பொருட்களை மீட்பதற்கும் புதிய சமையலறையொன்றைக் கட்டுவதற்கும் பணம் தேவைப்படுவதாக இவர் கூறுகிறார்.



உடலுறுப்புகளை விற்பனை செய்யும் விவகாரம் குறித்து ஒரு பொது விவாதத்தை முடுக்கிவிடவேண்டிய தேவை எழுந்திருக்கிறது என்று முன்னணி டாக்டர் ஒருவர் கூறியிருக்கிறார்.

இந்த விவகாரம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த பிரிட்டிஷ் உறுப்பு மாற்றுச் சிகிச்சை சங்கத்தின் முன்னாள் தலைவரான பேராசிரியர் பீற்றர் பிரெண்ட் பல நல்ல காரணங்களுக்காக மேற்கு நாடுகள் உடலுறுப்புகளை விற்பனை செய்வதை சட்டவிரோதமான காரியம் என்று பிரகடனம் செய்து தடைசெய்துவிட்டன. ஆனால், அந்தரங்கமாக உடலுறுப்பு விற்பனை நடந்துகொண்டு தான் இருக்கிறது. இது தொடர்பில் ஒரு விவாதம் இடம்பெற வேண்டியது அவசியமானதாகும்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஐக்கிய இராச்சியத்தில் 7000 பேர் சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். காத்துக் கொண்டிருந்த வேளையில் கடந்த வருடம் 300 பேர் மரணமடைந்துவிட்டார்கள்.

இங்கிலாந்திலும் வேல்ஸிலும் வட அயர்லாந்திலும் உடலுறுப்புகளை விற்பனை செய்ய முன்வருவது மனித இழையங்கள் சட்டத்தின் கீழ் குற்றச் செயலாகும். உறுப்பு மாற்றுச் சிகிச்சைக்கு உடலுறுப்பை விற்பனை செய்வதற்கு வெளிநாடு செல்வது கூட ஐக்கிய இராச்சியத்தில் தண்டனைக்குரிய குற்றச் செயலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவம்



# நோய் தீர்க்கும் வாழை

வாழைத் தண்டை பொரியல், கூட்டு, சாம்பாராகச் செய்து சாப்பிடுவது வரைக்கும் தான் நமக்குத் தெரியும். அது எந்த வகையில் நமக்கு மருந்தாக உதவுகிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

வாழைத்தண்டு குடலில் சிக்கிய மணல்-கற்களை விடுவிக்கும். சிறுநீர் தாராளமாகப் பிரியும். மலச் சிக்கலைப் போக்கும். நரம்புச் சோர்வையும் நீக்கும் வாழைத்தண்டுச் சாற்றை இரண்டு அல்லது மூன்று அவின் வீதம் தினம் சாப்பிட்டு வந்தால், வாய் ஓயாமல் இருமும் இருமல் நீங்கும். கோழைக் கட்டையும் இளகச் செய்யும். நல்ல பாம்புக் கடிக்கு வாழைத் தண்டு சாற்றை ஒரு டம்ளர் அளவும் உள்ளுக்குக் கொடுத்தால் விஷம் தானாக இறங்கிவிடும்.

வாழைப்பூவில் துவர்ப்புச் சத்து இருப்பது அனைவரும் அறிந்து விஷயம், அந்தத் துவர்ப்பைத் தண்ணீர் விட்டுப் பல தடவை கசக்கிப் பிழிந்து எடுத்து விடுகிறார்கள் நம்மில் பலர் துவர்ப்பு இருந்தால் சுவையிருக்காது என்று நினைத்து அதனுடைய சத்தையெல்லாம் கழிவுக்கு அனுப்பி விடுகிறார்கள்.

அந்தத் துவர்ப்பு இருந்தால் ஊட்டச் சத்து வீணாகாமல் உடம்புக்கு 'பி' விட்டமின் கிடைக்கிறது. பல வியாதிகளும் இதனால் நிவர்த்தி அடைகிறது என்பதை அறிய வேண்டும்.

வாழைப் பூவின் சத்தை வீணடிக்காமல் சாப்பிட்டால் மூலநோயில் உதிரம் கொட்டுவதை நிறுத்தம்; கரியமில வாயுவையோட்டும்.

# அகத்தியின் அருமையும் ஆபத்தும்

செடி இனத்தைச் சேர்ந்த அகத்தி தோட்டங்களில் குறிப்பாக நீர் தேங்கிய நிலங்களிலும் வெற்றிலைக் கொடிக் கால்களிலும் விளையும். அகத்தியில் சாழை அகத்தி, சிற்றகத்தி,



சீமை அகத்தி என்ற சில வகைகள் உண்டு.

பொதுவாக அகத்தி வெள்ளை நிறத்தில் பூக்கும். சிவப்பு நிறத்தில் பூக்கும் அகத்தி சிவப்பகத்தி என்று அழைக்கப்படுகிறது.

சிறிது உப்பு சுவையும் குளிர்ச்சித் தன்மையும் கொண்ட இக்கீரையை வேறு மருந்துகள் உண்ணும் காலங்களில் உண்ணக்கூடாது. ஏனெனில், மருந்துகளின் வீரியத்தை அகத்திக் கீரை குறைக்கவும் அழித்துவிடவும் செய்யும்.

இக்கீரையை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொண்டால் இரத்தம் கெட்டுப்போகும் வாய்ப்புண்டு. சொறி, சிரங்கும் தோன்றலாம். இரத்தம் குறைந்து இரத்தச்சோகை ஏற்படலாம். வயிற்று வலியும் பேதியும் உண்டாகலாம்.

காய்ச்சல் நேரத்தில் இக்கீரையைப் பிழிந்து அதன் சாற்றில் இரு துளி மூக்கில் விட்டால் காய்ச்சல் நீங்கும். அகத்தி இலைச்சாற்றை நெற்றியில் தடவி நெற்றியை இலேசாக அனலில் காண்பிக்க கடுமையான தலைவலி நீங்கும்.

சுண்ணாம்புச் சத்து, விட்டமின் ஏ நிறைய உள்ளது. போதுமான பால் சுரக்காத தாய்மார்கள் தொடர்ந்து அகத்திக் கீரையைச் சாப்பிட நன்கு பால் சுரக்கும்.

இக்கீரை சமைக்கும் போது நன்றாக வேக வைத்து உண்ண வேண்டும். வயிற்றில் உள்ள புழுக்களை வெளியேற்றும் சக்தி இக்கீரைக்கு உண்டு. மலச்சிக்கல் நீங்கும்.

குழந்தைகளுக்கு நீர் கோர்த்துக் கொண்டால் இக்கீரையின் சாற்றை ஐந்துக்கு ஒரு பங்கு தேன் கலந்து தலை உச்சியில் தடவினால் நீர்க்கோவை மறையும். இது வாயுவை உண்டாக்கும் இயல்புடையது. எனவே, வாய்வுக் கோளாறு உள்ளவர்கள் இக்கீரையை உண்ணக்கூடாது.

# அப்பாவுக்கு ஆலோசனை...

குழந்தை வளர்ப்பு என்பது பெரும்பாலான ஆண்களைப் பொறுத்தவரை பெண்கள் சமாச்சாரம். குழந்தையை விரும்புகிற அப்பாக்கள் கூட கைக்குழந்தையைத் தூக்கவோ அதைக் கவனித்துக் கொள்ளவோ தயாராக இருப்பதில்லை. காரணம் குழந்தையைத் தூக்கும் போது சிறுநீர், மலம் கழிக்கலாம் அல்லது வாந்தி எடுக்கும். இதனால் அருவருப்பு அடையும் அப்பாக்கள் சிலர் குழந்தைப் பருவச் சிரமங்களைக் கடந்த பிறகு குழந்தை ஓரளவுக்கு வளர்ந்த பிறகே அதன் வளர்ச்சியில் அக்கறை எடுத்துக் கொள்வார்கள்.

இந்த மனப்பான்மை மிகத் தவறானது என்கிறார்கள் மனநல மருத்துவர்கள். குழந்தை வளர்ப்பில் ஆரம்ப காலத்திலிருந்தே அப்பாக்களும் பழக்கப்படுத்தப்பட வேண்டும் என்கிறார்கள் அவர்கள். எந்தெந்த விதங்களில் குழந்தை வளர்ப்பில் பங்கு கொள்ளச் செய்ய முடியும் என்பதற்கு சில யோசனைகள். பிறந்த குழந்தையைத் தூக்க முதல் நாளிலிருந்தே தன் கணவனுக்கே கற்றுத்தர வேண்டும் மனைவி. கழுத்து நிற்காத குழந்தையை எப்படிப் பிடித்துக் கொள்ள வேண்டும், எப்படி வைத்துக் கொள்ள வேண்டும் என்று ஒன்றிரண்டு முறைகள் கற்றுக் கொடுத்தால் பழகி விடும்.

தாய்ப்பால் குடிக்காத குழந்தைக்குப் பாலாடையில் அல்லது போத்தலில் எப்படிப் பால் கொடுக்க வேண்டும் என்பதை குழந்தையின் அப்பாவுக்கும் கற்றுத்தரலாம். இதனால் குழந்தை அழும்போதெல்லாம் பிரசவித்த தாய் எழுந்து [illegible]லை வருத்திக் கொள்ளாமல் சற்று நேரமாவது ஓய்வெடுக்க முடியும். கணவன்- மனைவி இருவருமே வேலைக்குச் செல்கிறார்களானால் குழந்தைக்குச் செய்ய வேண்டிய வேலைகளை இருவரும் பகிர்ந்து கொள்ளலாம். உதாரணத்திற்குக் குழந்தையைக் குளிப்பாட்டுவது, சாப்பாடு கொடுப்பது போன்றவற்றை ஒருவரும் இரவில் அதற்குச் சாப்பாடு கொடுத்துத் தூங்க வைப்பதை இன்னொருவரும் பிரித்துக் கொள்ளலாம்.

என்னதான் பிசியான வேலையில் இருந்தாலும் தினம் சிறிது நேரத்தைக் குழந்தையுடன் செலவிடுவதை வழக்கமாகக் கொள்ளும்படி அவரைப் பழக்குங்கள். அப்பாவின் முகத்தைப் பார்த்ததும் சில குழந்தைகள் ஏதேனும் பேச முயற்சி செய்யும். அம்மாவிடம் கூட இப்படி இருக்காது. அவற்றைக் காது கொடுத்துக் கேட்க வேண்டியது முக்கியம். எனக்கு நேரமில்லை அம்மா கிட்ட சொல்லு என்று தட்டிக் கழிப்பதுதான் உதாசீனப்படுத்தப்படுகிறோம் என்ற உணர்வைக் குழந்தையின் மனதில் ஏற்படுத்தி விடும். குழந்தை விருப்பமானதையெல்லாம் வாங்கிக் கொடுப்பதோடு அப்பாக்களின் கடமை முடிந்து விடுவதில்லை. தன் அன்பை அடிக்கடி வார்த்தைகளால் வெளிப்படுத்த வேண்டும். வார்த்தைகளாலும் செயல்களாலும் மட்டுமே அன்பைக் குழந்தைகளால் புரிந்து கொள்ள முடியும். குழந்தையின் பள்ளிக்கூடத்தில் விசேட நாட்கள், ஆண்டு விழா போன்றவற்றிற்குத் தவறாமல் தந்தை செல்ல வேண்டும்.

# தண்ணீரின் அவசியம்!

மனித உடலில் தண்ணீர் என்பது ஜீரணம், வியர்வை வெளியேற்றம், உடலுக்குள் சத்துணவை எடுத்துச் செல்வது, திரவ மற்றும் திடக்கழிவுகளை வெளியேற்றுவதற்கு, உடலின் வெப்பநிலையை சீராக வைத்திருப்பதற்கு போன்ற பல்வேறு இரசாயன மாற்றங்கள் நிகழ்வதற்கு அவசியமாகிறது.



நம் உடலின் மொத்த எடையில் 60 சதவீத அளவிற்கு இருப்பது தண்ணீர்தான். 5 முதல் 10 சதவீதம் வரை உடலில் இருந்து தண்ணீர் இழப்பு ஏற்பட்டால் அது மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும். அதேநேரத்தில் 15 முதல் 20 சதவீதம் வரை தண்ணீர் இழப்பு ஏற்படும் பட்சத்தில் அது ஏறக்குறைய மரணத்தில் சென்று முடியலாம்.

உடலில் உள்ள திசுக்களுக்கு ஒரு பாதுகாப்புப் போர்வை அல்லது மெத்தை போன்று தண்ணீர் செயலாற்றுகிறது. உடலின் அனைத்து திசுக்களுக்கும், இரத்தத்தின் அடிப்படைக்கும், மூட்டு இணைப்புகளில் உள்ள திரவம், தண்ணீர், கோழை வடிதல் போன்றவற்றிக்கும் தண்ணீரே காரணமாகத் திகழ்கிறது. உடல் உறுப்புகள் முறைப்படி செயல்படுவதற்கு உராய்வு எண்ணெய் போன்று தண்ணீர் செயலாற்றுகிறது.

நம்முடைய தோலினை மென்மையாகவும், மிருதுவாகவும் வைத்துக் கொள்வதற்கு உடலில் உள்ள தண்ணீரே பங்காற்றுகிறது. வயது முதிர்வடையும் போது தோலில் ஏற்படும் சுருக்கங்களுக்கும் உடலில் உள்ள தண்ணீரின் அளவு குறைவதே காரணம். ஆகவே தான் பிறக்கும் குழந்தைகளின் உடலில் சுமார் 75 முதல் 80 சதவீதம் அளவிற்கு தண்ணீர் இருப்பதால் அவர்களின் தோல் மென்மையாக காணப்படுகிறது. அதுவே 65,70 வயதான முதியோருக்கு உடலில் தண்ணீர் சதவீதம் 50 குறைவதால் சுருக்கங்கள் காணப்படுகிறது. தண்ணீர் குறைவின் காரணமாகவே எலும்பு இணைப்புகளில் பாதிப்பு ஏற்படுவதும் முதுமையில் நிகழ்கிறது.

மனித உடலுக்கு அன்றாடம் சராசரியாக 6 முதல் 8 டம்ளர் வரையிலான தண்ணீர் தேவையாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்

அமிழ்தென்று
உன்னைச் சொன்னார்
கண்டறியோம் அவ்வமுதை
கண்முன்னே கொஞ்சி விளையாடுகிறாய் நீ

தேனென்று
வியந்தார் உன்னை
எவ்வளவுதான் உண்டாலும்
தெவிட்டுவதில்லையே நீ

கன்னியென்று
குழைந்து நின்றார்
முதிர் கன்னியாகி
மூக்கைச் சிந்துபவளா நீ?

தேவதையென்றார்
கண்ணைச் சிமிட்டி
நீ காணாமற் போவதில்லையே?

உவமைகள்
நாண,
தோற்கடித்து நிமிர்ந்தவளே

என்னென்று
சொல்லவுன்னை?

காதலியாய்
என்னுள் கலந்து
உறவாடுவாய்
ஆனாலும்
என் 'உயிர்' வாங்குவதில்லை

ஆசானாய்
போதனை பல செய்வாய்
ஆனாலும்
'ஊதியம்' எதிர்பார்ப்பதில்லை.

குயிலாகி
இதயம் வருடுவாய்
ஆனாலும்
நின்மேனி கறுத்ததில்லை.

கடலாகி
விரிந்து வியப்புச் செய்வாய்
ஆனாலும்
உப்பாய் கரித்ததில்லை

என்னென்று
சொல்லவுன்னை?

நீ
என் அருகிருக்க
மதிக்கப்படுகிறேன் நான்

நீ
என்னுள் சுவற
புத்துணர்ச்சி பெறுகிறேன் நான்

நீ
என்னுடன் கூட
புதியவனாகிறேன் நான்

நீயே
என்னைப் போஷிக்கின்றாய்

நீயே
என்னை இயக்குகின்றாய்

நீயே
என்னை வாழ்விக்கின்றாய்

நீ
பிரிந்தால்
நான் இல்லை
'தமிழே'
நீ
என் உயிர்
'உயிரே'
உன்னைப் பிரிந்தால்
ஏது நான்?

**- துணவியூர் கேசவன்**

# தலைகீழ்

சாமரம் வீசும் வசந்தகால நிலவொளியில்
சஞ்சலம் மறந்து சங்கதி பேசி
சொந்தங்கள் கூடி சந்தங்கள் பாடி
சோகங்கள் தொலைத்திருந்தோம்

வந்திடும் வாழ்வில் வசந்தமென
வானத்து விண்மீன்கள் பாடக்கேட்டு
வாசலில் காத்து நின்றோம்
வாயினிக்கப் பாடி நின்றோம்

வந்து வீழ்ந்தது வாசலிலே பேரிடி
நொந்து துவண்டோம் வெந்து மடிந்தோம்
எண்ணியிராத் துன்பமெல்லாம்
எம் மண்ணில் எண்ணில்லா அனுபவித்தோம்
காய் நகர்த்தும் போட்டியில்
கண்மூடிக் கொண்டது உலகம்
பகடைக் காயாய் நாமானோம்
பாதி வழியில் பாடையிலே பயணமானோம்!

**- எஸ்-கார்த்தி**




உங்கள் கவிதைகளும் இப்பகுதியில் வரவேண்டுமானால்
**'Saturday மெயில்'**
**இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்**
என்னும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்...



# கைதி

சின்னச் சின்ன ஆசைகள்
சிறைத் தண்டனைக் குற்றங்களாய்
சிருஷ்டிக்கப்பட்டு
பள்ளி வயதுப் பந்தங்கள்
பகைநாட்டு உறவுகளாய்
தீர்மானிக்கப்பட்டு
பருவ வயது ஏக்கங்கள்
மரண தண்டனைக் குற்றங்களாய்
தீர்ப்பளிக்கப்பட்டு
மனிதமற்ற மனிதர்களிடையே
வாழ்க்கை என்னும் சிறையில்
அணுவணுவாய் மரணித்துக் கொண்டிருக்கும்
இவள் ஒரு திறந்த வெளிக் கைதி

**- மெல்லியல்**

# அவளின் இதய விலாசத்துக்கு...

காதலித்துப்பார் கவிதை வரும் -
என்பார்கள்
ஆனால் எவருமே சொல்லவில்லை
காதலித்தால் கண்ணீர் வரும் என்று
சொல்லியிருந்தால் காதலித்து
இருக்கவே மாட்டேன்.

பெண்ணே...!
என் ஞாபகச் சின்னம் உன் -
மனதில் தோன்றவில்லையா...!
ஒவ்வொரு விநாடியும் - என்னைக்
கேட்டுக் கொண்டது - என் நாவு

காதலியே...!
விழிகளில் தோன்றிய - உன்
நினைவுகளைத் தேடிய
கண்கள் கேட்டது - அன்பே
எங்கே நீ என்று...!

**ம.சங்கீதன்**
**சிறாம்பியடிலேன்,**
**யாழ்ப்பாணம்.**

# வானம்

வானம் அழுகிறது
எம்மைப் போலவே....
சிணுங்கி,
வெடித்து,
விக்கி,
அழுகிறது வானம்
எம்மைப் போலவே....

முள்வேலிக்குள்
முகவரி தொலைத்து,
முடங்கிப்போன,
'பாவம்' தொலையாப்
பாவிகட்காய்
கையாலாகாத வானமும்
அழுகிறது.

காட்சி மாற்றங்கண்டு
'ஒப்பனை' மாற்றி
புதுவேடம்
தாங்கத் தெரியா
'வானமும்'
அழுகிறது.

வானம்
சிரிப்பதுண்டு
சிரிக்கும்போதும்
அழுகைக்கான
கருவைச் சுமந்துகொண்டுதான்
அது
சிரிப்பதுண்டு

நாமும்
சிரிக்கிறோம்
வானத்தைப் போலவே.

**- செவ்வேள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொந்தரவுக் கேள்விகளை சமாளிப்பது எப்படி?

தங்களின் நிலை எப்படி இருந்தாலும் அடுத்தவர் விடயத்தில் மூக்கை நுழைக்கும் ஆர்வ முள்ளோர் அதிகம். அவர்கள் எப்போதும் கைவசம் தயாராக சில கேள்விகளை வைத்துக் கொண்டு அலைவார்கள். அவர்கள் தங்களின் தொந்தரவுக் கேள்விகளை உங்களை நோக்கி வீசும் போது சமாளிப்பது எப்படி? இதோ சில ஆலோசனைகள்.

**01. 'எப்ப கல்யாணம் செய்யப்போறீங்க?'**

இளம் பருவத்தினர் பொதுவாக அதிகமாக எதிர்கொள்ளும் கேள்வி இது. அல்லது இதையே 'ஏன் இன்னும் திருமணம் செய்யவில்லை' என்று மாற்றிக் கேட்பார்கள். ஏதாவது சொல்லி சமாளிக்கலாம் என்றாலும் மேலும் பல கேள்விகள் தொடர்ந்து வரும். தவிர கேள்வி கேட்டவர் உங்களுக்கு உதவியாக இருப்பதாக நினைத்துக்கொண்டு 'என்னோட ஒண்ணுவிட்ட சித்திக்கு உனக்குப் பொருத்தமாக ஒரு பையன் இருக்கான்' என்று திடீர் திருமணத் தரகராக மாறி வரன்களை அள்ளிவிடத் தொடங்குவார்கள். பிய்த்துக் கொண்டு விலகுவதே கடினமாகிப் போய்விடும்.

**இப்படி சமாளிக்கலாம்....**

நீங்கள் கடுமையாகவோ, மழுப்பலாகவோ பதில் சொல்லாமல் உறுதியாக மென்மையாக அதே நேரம், வெளிப்படையாகப் பதில் கூறலாம். 'இப்போது அதில் நான் கவனம் செலுத்தவில்லை. வேறு விடயத்தைப் பேசலாமே?' என்று திசை திருப்பலாம்.

**02. நீங்க ஹவுஸ் வைவ்பா?**

பணிபுரியும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், ஹவுஸ் வைவ்பா'க இருப்பதே தரம் தாழ்ந்ததாகக் கருதப்படுவது அதிகரித்து வருகிறது. ஒருவேளை, வேலைக்குச் செல்லாத பெண்மணிக்கு வீட்டில் பொறுப்பு அதிகம் இருக்கலாம். பட்டப் படிப்புப் படித்திருந்தாலும் வேலைக்குச் செல்வதற்குச் சூழ்நிலை சரியாக இல்லாமல் இருக்கலாம். கணவரின் வருமானமே குடும்பத்துக்குப் போதுமானதாக இருக்கலாம். ஆனால், மேற்கண்ட கேள்வியைக் கேட்பவர்கள் அதைப் பற்றியெல்லாம் யோசிப்பதில்லை.

**இப்படிச் சமாளிக்கலாம்....**

இந்தக் கேள்வி உங்கள் மீது பாயும் போது 'ஆமாம்... நான் ஹவுஸ் மேக்கர்தான். குடும்ப வேலைகளை பொறுப்பாகப் பார்த்துக்கொள்வதில் நான் பெருமைப்படு
கிறேன்' என்று கூறி விடுங்கள்.

**03. 'விசேஷம் எதுவும் உண்டா?'**

அண்மையில் திருமணமான ஒருவரை பார்க்கும் அவருக்குத் தெரிந்த எவரும் கேட்கும் முதல் கேள்வி 'ஏதாவது விசேஷம் உண்டா? என்பது. '30 வயசாகப் போகுதுங்கிறீங்க.... இன்னுமா குழந்தை பெறவில்லை?' என்று 'கரிசனமாக'க் கேட்பார்கள். ஆலோசனைகளையும் அள்ளிவிடத் தொடங்குவார்கள். (அந்த டாக்டரைப் போய்ப் பார்த்தால், இந்தக் கோவிலுக்குப் போனால் குழந்தை நிச்சயம் என்பார்கள்!).

**இப்படி சமாளிக்கலாம்....**

சிரியுங்கள். எதுவும் கூறாமல் தவிர்த்து விடுங்கள். ரொம்பத் துளைத்தால் நாங்கள் இப்போதைக்கு வாழ்க்கையை 'என்ஜோய்' செய்கிறோம் என்று கூறிவிடுங்கள். மீண்டும் துருவினால் 'தேவைப்படும் போது உங்கள் ஆலோசனையை கேட்கிறேன்' என்று கூறுங்கள்.

**04. 'உங்க சம்பளம் எவ்வளவு?'**

எல்லோருக்குமே அடுத்தவர் சம்பளத்தை அறிவதில் ஏனோ அப்படி ஓர் ஆர்வம். ஒருவர் திருமணம் ஆனவர், ஆகாதவர் என்பதெல்லாம் இல்லை. அவர் திருமணமானவர் என்று தெரிந்தாலே யோசிக்காமல் சற்றும் தயங்காமல் இக்கேள்வியைக் கேட்பார்கள். இது ஒருவரின் தனிப்பட்ட விடயம் என்று பலர் உணர்வதில்லை.

**இப்படிச் சமாளிக்கலாம்....**

சங்கடத்தை தவிர்க்க விரும்புபவர் என்றால் ஒரு புன்னகையுடன் 'என்ன பெரிய சம்பளம்? வாழ்க்கையை ஓட்டற அளவுக்குத்தான் வருது' என்று கூறுங்கள் 'பட்'டென்று நெத்தியடியாய் அடிக்க வேண்டும் என்றால் 'உங்க சம்பளத்தை விட அதிகம் தான்' என்று சொல்லுங்கள்.

**05. 'உங்க கல்யாணத்தில ஏதும் பிரச்சினையா?'**

திருமணமான ஒரு பெண் தனியாகத் தனது பெற்றோர் வீட்டுக்கு வந்தாலே போதும் அக்கம் பக்கத்தவர்கள் 'ஏம்மா.... உங்க வீட்டுக்காரரோட என்ன பிரச்சினை?' என்று அக்கறையாக விசாரிக்கத் தொடங்கிவிடுவார்கள்.

**இப்படி சமாளிக்கலாம்....**

பெற்றோரைப் பார்க்க வேண்டும் என்பதற்காகவே வந்திருப்பதாக பொறுமையாகக் கூறுங்கள். அவர்கள் மேலும் கேட்டால் அப்பேச்சுக்கு 'கத்தரி' போட்டு விடுங்கள்.

**06. 'உங்களுக்கு சமைக்கத் தெரியாதா?'**

படிப்பில் கவனம் செலுத்தி வரும் இன்றைய இளம் பெண்கள் பலர் சமையலில் நிபுணர்கள் அல்ல. அவர்கள் அடிக்கடி எதிர்கொள்ளும் கேள்வி இது.

**இப்படி சமாளிக்கலாம்....**

'ஆமாம், எனக்குச் சமைக்கத் தெரியாது. ஆனா என் கணவர் அருமையா சமைப்பார்' என்று உங்களவரின் சமையல் திறனை விரிவாக விளக்கி எதிராளியின் முகம் சிவக்க வையுங்கள்.

# இல்லறம் இனிக்க 5 வழிகள்



உங்களுடைய வாழ்க்கையைச் சிறந்ததாக அமைத்துக்கொள்ள இந்த 5 விடயங்களையும் பாருங்கள்.

**1.பட்டியலிடுங்கள்**

திருமணமாகி சில ஆண்டுகளுக்குள் மிகப் பெரிய சிக்கல் எதுவும் வராது. அவ்வாறு வந்தாலும் விரைவிலேயே தீர்ந்துவிடும். பெரும்பாலும் குழந்தைகள் பிறந்த பின் அலுவலகம் சம்பந்தமான பொறுப்புகள் அதிகரித்த பின்னர் தான் சிக்கல்கள் முளைக்கின்றன. இந்த கால கட்டத்திற்குள் மனைவியின் விருப்பு-வெறுப்பு,நிறை-குறை, இயலும்-இயலாமைகளைக் கணவனால் கண்டுகொள்ள முடியும். அதேபோல கணவரின் குணங்களையும் மனைவியால் அறிந்துகொள்ள முடியும். எனவே, அவற்றைத் தனித்தனியாகவோ அல்லது சேர்ந்தோ பட்டியலிடுங்கள்.

**2.கணக்கெழுதுங்கள்**

நடுத்தரக் குடும்பங்களில் இருவருமே வேலைக்குச் சென்றாலும் 20 ஆம் திகதியே மனைவி பஞ்சப்பாட்டு பாட ஆரம்பித்து விடுகிறார். வாங்குற சம்பளத்தை உங்களிட்டதான் கொடுத்தேன் என கணவனும் கோபப்பட ஆரம்பித்து பிரச்சினைகள் தொடங்குகின்றன. இதற்குக் காரணம் பெரும்பாலான கணவர்களுக்கு விலைவாசி பற்றிய பத்திரிகை அறிவுதான் இருக்கும். கடை அறிவு இருக்காது. எனவே, வாங்குகிற பொருளுக்கான விலையை எழுதி வையுங்கள். எழுதுவதோடு மட்டுமன்றி, அதை கணவர் கண்ணில் படும்படி வைத்துவிடுங்கள்.

**3.வேலைகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள்**

களைப்பாக இருக்கிறது, போர் அடிக்கிறது இவை இரண்டுமே தாம்பத்திய வாழ்வில் கணவன்-மனைவி இருவருமே சொல்லக் கூடியவை. அலுவலகம்,வீடு ஆகிய இரண்டு இடங்களிலும் அதிக வேலை செய்பவர்களுக்கு உடல் மெலியும். உள்ளம் சோர்வடையும். இரண்டு இடங்களிலும் அதிக வேலை இல்லாதவர்களுக்கு போர் அடிக்கும், எனவே, கணவன்-மனைவி இருவரும் உட்கார்ந்து பேசித் தங்களுடைய வேலைகளைப் பகிர்ந்து கொள்ளலாம். அதற்காக வேலைகளைக் கட்டாயமாகத் திணிக்கக்கூடாது.

**4.பாராட்டுங்கள்**

உங்கள் துணை எந்தவொரு செயலைச் செய்தாலும் அது நல்லதாக இருக்கும் பட்சத்தில் பாராட்டத் தவறாதீர்கள். குறிப்பாக உங்களுடைய அலுவலக நண்பர்கள், உறவினர்கள் முன்னிலையில் பாராட்ட மறக்காதீர்கள். நீங்கள் அடைந்த வெற்றிக்கு உங்கள் துணையே முழுமுதற் காரணம் என அவர்களை முன்னிலைப்படுத்தி பாராட்டும்போது உங்கள் மேல் இருக்கும் கோபமெல்லாம் சூரியனைக் கண்ட பனி போல விலகிவிடும். சமையலில் சிறுசிறு தவறுகள் இருந்தாலும் எரிந்து விழாமல் பாராட்டுவதன் மூலம் நாசூக்காக இதை உணர்த்துங்கள்.

**தனிமையைப் பயன்படுத்துங்கள்**

எவ்வளவுக்குத்தான் உங்களுக்கு அதிகமான வேலை, இருந்தாலும் கிடைக்கின்ற தனிமையைப் பயன்படுத்துங்கள். வீட்டிலும் வேலை, அலுவலகத்திலும் வேலை என எப்போதும் பிஸியாகவே இருக்கும் கணவன்-மனைவி இருவரும் சிறிது நேரம் ஒதுக்கி தனிமையில் மனம் விட்டுப் பேசுங்கள். இருவரும் மாதம் ஒருநாள் விடுமுறை எடுத்துக் கொண்டு வெளியில் எங்கேயாவது சென்று வரலாம். அன்றைய தினம் வீட்டில் சமைக்காமல் ஹோட்டலில் சாப்பிடலாம். நீங்கள் தனிமையில் இருக்கும் நேரங்களில் உங்கள் துணையின் கைகளை ஆதரவாகப் பற்றியிருங்கள். உனக்காக நான் எப்போதும் இருக்கிறேன் என்பதை அந்தப் பற்றுதல் சொல்லாமல் சொல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பணம் தரும் மலர்

## அறிந்ததும்... அறியாததும்...

எச்.ஹரீஷ்னா

'வாழ்வின் முக்கிய தேவைகளுக்கு வால் பூ பயன்படுகிறதா? இது அனைவரிடமும் உடனடியாக எழக்கூடிய கேள்வியே! ஆனால் உங்கள் வாழ்வில், ஒரு நாளாவது 'வால் பூ' உங்கள் கையில் இருந்திருக்கும்.

திருமண விழா, பாடசாலை விழா, மரண நிகழ்வு என்று உங்கள் வாழ்வில் ஏற்படுகின்ற நிகழ்வுகளின் வால்பூவின் பங்களிப்பு பெரிதும் காணப்படுகிறது.கண்டதே இல்லை என்று கூறுபவர்களுக்கு ஓர் உண்மையைக் கூறவேண்டும். 'அந்தூரியம்' என நீங்கள் ஆசையுடன் அழைக்கும் பூவின் ஆங்கிலப் பெயர் 'ரெயில் பிளவர்' *(Tail Flower)*. ஆஹா....! இது தான் வால் பூவா என்று ஆச்சரியப்படாதீர்கள். அந்தூரியம் என்பது கிரேக்க மொழிச் சொல். அதன் ஆங்கிலப் பதம் 'ரெயில் பிளவர்' என்றால் நமது தூயதமிழில் எவ்வாறு அழைப்பது. அது தான் 'வால் பூ' என்கிறோம். இப்பொழுது சொல்லுங்கள், உங்கள் வாழ்வின் முக்கிய நிகழ்வுகளின் இதன் பங்களிப்பு இருந்திருக்கிறதல்லவா?

இன்று வீடுகளை அலங்கரிக்கப்பயன்படுவதுடன், இடவசதி குறைந்த மாடி வீடுகளிலும், சூரிய ஒளி அதிகம் பெறமுடியாத இடங்களிலும் வைத்து பராமரிக்கக்கூடிய மலராக காணப்படுகிறது.

இம்மலருக்கு நிழல் அவசியமாக இருப்பதால், புறாக்கூடு போன்ற வீடுகளிலும் வளர்க்க முடிகிறது. எனினும் நாட்டின் ஏற்றுமதிப் பொருட்களில் அங்கம் வகிக்கின்ற இம்மலரின் தொழில் ரீதியான வளர்ப்பிற்கு மத்திய மலைநாடு மற்றும் ஈரவலையங்கள் சிறந்த இடமாகவுள்ளது.

இந்த வால் பூவை நாளாந்த வாழ்வில் கண்டிருப்பினும், இதைப்பற்றி எத்தனை பேருக்கு தான் தெரியும்? இவை மட்டுமன்றி இலங்கை வியாபார துறையில் இது எந்த வகையில் உதவுகிறது என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.

இன்று நாட்டில் அதிக விற்பனையைக் கொண்ட மலர் வகைகளில் இதுவும் ஒன்றாக காணப்படுகிறது. இந்த அந்தூரியம் கன்றுகளாகவும், மலர்களாகவும் உள்ளூர் சந்தைகளில் விற்பனையில் உள்ளன. ஆனால் இவ்வாறு உள்ளூர் சந்தைகளில் விற்பனை செய்வதன் மூலம் உற்பத்தியாளர்கள் குறைந்தளவு வருமானத்தையே ஈட்டமுடியும்

இதனால் அந்தூரியத்தின் ஏற்றுமதியை அதிகரிப்பதில் அரசாங்கம் பெரிதும் கவனம் செலுத்தி வருகின்றது. 1/4 ஏக்கர் நிலத்தில் அந்தூரியத்தை தொடர்ந்து 5 வருடங்கள் பயிரிட்டு, விற்பனை செய்வதன் மூலம் சுமார் 4 இலட்சம் ரூபா இலாபம் பெறமுடியுமென பேராதனை அரச தாவரவியல் பூங்காவின் 5 வருடத்திற்கான மதிப்பீடு தெரிவிக்கின்றது. அந்நிலத்தில் மேற்கொள்ளுகின்ற பயிர்ச் செய்கையின் போது, வருடம் ஒன்றிற்கு 35,000 பூக்கள் அளவில் அறுவடை செய்ய முடியுமெனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

பணப்பயிராய் அலங்கரிக்கக்கூடிய அந்தூரியம் பயிர்ச் செய்கையை, பயனுள்ள வகையில் அமைய வேண்டுமெனில், அதற்குரிய போதுமான இடவசதி தேவை என்பதுதான் இதிலுள்ள பாரிய குறைபாடாய் காணப்படுகிறது.ஏறத்தாழ 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட செடிகளை வளர்ப்பதே வருமானத்தைத் தரும் வழி என விவசாயத் திணைக்களச் செய்திகள் தெரிவிப்பதுடன், ஒவ்வொரு செடியிலும் வருடத்திற்குச் சராசரியாக 6 மலர்களைப் பெற முடியுமெனவும் இதனால் அதிக இடவசதி உடையவர்களுக்கே பயிரிடும் ஆலோசனை வழங்கப்படுவதாகவும் அவ்வாறான அதிக மலர்ச் செய்கை இல்லாவிடின் இலாபமீட்ட முடியாது எனவும் அத்தகவல்கள் கூறுகின்றன. இதன்படி 10 ஆயிரம் செடிகளின் மூலம் ஏறத்தாழ 60 ஆயிரம் மலர்களைப் பெற முடியும்.



இனி இதன் விற்பனையை பார்ப்போமாயின் இம்மலர்கள் உள்நாட்டில் விற்கப்படுவதுடன், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுவது தெரிந்ததே.

பொதுவாக இதய வடிவில் இதழ்களைக் கொண்டுள்ள இம் மலர்கள் சிவப்பு,இளஞ் சிவப்பு,வெள்ளை,பொன்மஞ்சள், பச்சை போன்ற பல நிறங்களில் காணப்படினும் இதன் அளவுகளையும் தரத்தையும் பொறுத்து கேள்வி அமைந்துள்ளது.

இதன்படி பளபளப்பான இதழ்களைக் கொண்ட மலர்களுக்கு கேள்வி அதிகமாகவுள்ளதுடன், இதழும் பூவும் ஒரே நீளமுடைய மலர்களே பெரிதும் விரும்பப்படுகின்றன. இவ்வாறான மலர்கள் அழகானவை என வாடிக்கையாளர்கள் கருதுவதால் அவற்றையே பெரிதும் விரும்புகின்றனர் என அந்தூரியம் விற்பனையாளர்கள் கூறுகின்றனர்.

இம் மலரொன்று உள்ளூர் விற்பனை நிலையங்களில் 25 ரூபா முதல் காலத்திற்கேற்ற வகையில் 35 ரூபா வரை விற்க முடியுமெனவும் தெரிவிக்கின்றனர்.

பொதுவாக இம்மலர்கள் 4-6 கிழமைகள் வரையில் வாடாமல் இருப்பதனால் நீண்டநாள் அலங்கார வேலைகளுக்கு உகந்ததாக அமைந்துள்ளது. எனவே, நீண்டநாள் அலங்கார வேலைகளுக்கு இவை பெரிதும் விரும்பப்படுகின்றன. அத்துடன், ஏனைய மலர்களிலும் விலை குறைந்ததாகவுள்ளது. இவற்றினை ஏற்றுமதி செய்யும் போது ஒரு பூ 40-45 வரை பெறுமதி உடையதாகிறது.

பிறந்தநாள் வாழ்த்துக்குக் கொடுக்கும் பூங்கொத்து முதல் திருமண மண்டப அலங்காரம் வரை ஏனைய பல வைபவ அலங்காரங்கள் எனத் தொடர்ந்து மரண அஞ்சலி மலர்வளையம் வரை அத்தனைக்கும் பயன்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விளையாட்டு

# இந்த நிலை என்று மாறுமோ?

இந்தியாவும், மேற்கிந்திய அணியும் ஐ.சி.சி. சாம்பியன்ஸ் கிண்ண இறுதி லீக் போட்டியை விளையாடிக் கொண்டிருக்கின்றன. ஆனால் இந்திய கிரிக்கெட் ரசிகர்களின் கண்களும் மனமும் பாகிஸ்தான்-அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையே நடைபெற்ற பரபரப்புப் போட்டியின் மீது இருந்தது. இது போன்ற ஒரு நிலையை இதற்கு முன்னால் இந்திய அணியும், கிரிக்கெட் ரசிகர்களும் எதிர்கொண்டதில்லை என்றே கூறிவிடலாம்.

காரணம் என்ன? பாகிஸ்தான் அணிக்கு எதிரான முதல் போட்டியில், அதுவும் மேற்கிந்திய அணி முந்தைய போட்டியில் 133 ஓட்டங்கள் என்ற இலக்கை எதிர்த்து விளையாடிய பாகிஸ்தானை திணறச் செய்து, வெற்றிக்கு போராட வைத்தது. ஆனால் இந்திய அணி பாகிஸ்தானை மிகவும் சுதந்திரமாக ஓட்டங்களைக் குவிக்க அனுமதித்தது.

மோசமான பந்து வீச்சு, மோசமான கள வியூகம், மோசமான களத்தடுப்பு ஆகியவற்றால் பாகிஸ்தானை வெற்றி பெற அனுமதித்ததாலும் அவுஸ்திரேலியாவிற்கு எதிரான போட்டி எதிர்பாராத விதமாக மழை காரணமாக தடைப்பட்டு இந்தியாவுக்கு ஒரு புள்ளி கிடைத்ததாலும் அவுஸ்திரேலிய-பாகிஸ்தான் போட்டி மீது இந்திய ரசிகர்கள் கவனம் குவிந்திருந்தது. ஏனென்றால் அவுஸ்திரேலியா தோற்று அதனால் இந்திய அணிக்கு அரையிறுதி வாய்ப்பு கிட்டாதா என்று இந்திய ரசிகர்கள் ஏங்கினர்.

ஆனால் உண்மையில் அரையிறுதிக்கு தகுதி பெற உகந்த அணி அவுஸ்திரேலியா தான் என்பதை நன்றாக உணரவேண்டும், இந்தியா பெயரளவில் இருந்தாலே போதும், அரையிறுதிக்கு வந்துவிட வேண்டும். கிண்ணத்தை கைப்பற்ற வேண்டுமென்றெல்லாம் கற்பனையில் மிதக்க முடியாது. மைதானத்தில் விளையாட வேண்டும், தரமான, திறமையான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஆதிக்கம் செலுத்த வேண்டும். இத்தனையும் செய்து இந்திய அணி அரையிறுதிக்கு தகுதி பெறாமல் போனால் தான் ரசிகர்கள் வருத்தப்படுவதில் நியாயமுள்ளது.

சேவாக், சகீர்கான், யுவராஜ்சிங் ஆகியோர் இல்லாத கையொடிந்த அணியை கூட்டிச் சென்று, அரைகுறையான பந்து வீச்சு, களத்தடுப்பு நிச்சயமின்மை என்ற நிலையில் சென்ற இந்திய அணி, கணக்கீட்டு அடிப்படையில் அரையிறுதிக்குள் நுழைந்து விட வேண்டுமென்று நினைப்பது கிரிக்கெட்டிற்கு அப்பாற்பட்ட இந்தியர்களின் தேசப்பற்று அல்லது ஒரு குறிப்பிட்ட நட்சத்திர வீரர்களை பார்த்துக்கொண்டேயிருக்கவேண்டுமென்ற நாயக வழிபாடு என்றே தான் கூறவேண்டும்.

அதற்காக இந்திய அணியை ஒரேயடியாக திட்டித் தீர்ப்பது, வசைமழை பொழிவது என்ற போக்கும் தேவையில்லை. இந்த சாம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் 3 போட்டிகளில் விளையாடிய இந்திய அணி ஒன்றில் தோற்று, ஒன்றில் வெற்றி பெற்றுள்ளது என்ற அளவில் யோசித்தாலே போதுமானது. அதனால் பெரிய அழுகையும் கோபமும் தேவையில்லை, அதற்காக செய்த தவறுகளை சுட்டிக்காட்டாமல் போனால் போகிறது என்று விட்டு விடவும் தேவையில்லை.

ஐ.சி.சி. ஒரு நாள் தரவரிசையில் கடைசி 18 அல்லது 19 மாதங்களாக உழைத்து முதலிடத்திற்கு முன்னேறிய இந்திய அணியும் தொடர்ந்து சிறப்பாகவே விளையாடி வரும் இலங்கை தென்னாபிரிக்க அணிகளும் அரையிறுதிக்கு முன்னேறாமல் வெளியேறுகின்றன என்றால் அதற்கு இந்த சாம்பியன் கிண்ணம் நடத்தப்படும் விதமும் ஒரு காரணம்.

ஒரே தவறு. ஒரு தவறு போதும் ஒரு நல்ல அணி வெளியேற என்ற முறையில் அமைக்கப்பட்டுள்ளது இந்த சாம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட். உதாரணமாக 2 போட்டிகளில் ஓரளவிற்கு நல்ல கிரிக்கெட்டை ஆடிய அவுஸ்திரேலியா திடீரென ஒரு 4 ஓவர்களில் ஏற்பட்ட தடுமாற்றத்தினால் அரையிறுதி வாய்ப்பை இழந்திருக்கும். எனவே, இது போன்ற ஒரு வடிவத்தில் நடத்தப்படும் ஒரு போட்டித் தொடரில் எது வேண்டுமானாலும் நடக்கலாம் என்று எந்த அணியும் களமிறங்க முடியாது. இதனாலேயே வெளியேறிய அணியை வெளியேறியதைக் காரணம் காட்டி குற்றம் சாட்ட முடியாது.

ஆனால், ஒரு நல்ல கிரிக்கெட் ஆட்டத்தை வெளிப்படுத்தாமல் 'சொத்தை'யாக விளையாடி தோல்வியைத் தழுவுவது ஏன் என்ற கேள்வியை எப்போதும் எழுப்ப வேண்டும். இந்த ஐ.சி.சி. சாம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் தொடர் தொடங்குவதற்கு முன் நியூஸிலாந்து அடைந்த தோல்விகளும் இங்கிலாந்து வாங்கிய தோல்விகளும் அந்த இரு அணிகளும் அரையிறுதிக்கு முன்னேறும் என்றும் யாரேனும் நினைத்திருப்பார்களா? இந்தியாவை விட்டுவிடுவோம். இலங்கை, தென்னாபிரிக்கா அணிகள் வெளியேறும் என்றும் எவராவது எதிர்பார்த்திருப்பார்களா?

எனவே, இந்தக் கூறுகளை எல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு இந்திய அணியின் ஆட்டத்தை மதிப்பீடு செய்ய வேண்டும்.

மேற்கிந்திய தீவுகளுக்கு இந்திய அணி சென்றது. மோசமாக பந்து வீசியது. படுமோசமாகக் களத்தடுப்பு செய்தது. ஆனால், தொடரை வென்றது. இலங்கையில் நடைபெற்ற முக்கோணத் தொடரிலும் இதே கதைதான் ஆனால், கிண்ணத்தை வென்றது. காரணம் பந்து வீச்சாளர்கள் ஓட்டங்களை வாரி வழங்க துடுப்பாட்ட வீரர்கள் சற்றே அதிகமாக ஓட்டங்களை அடித்தனர் என்பது தான் இந்த வெற்றிகளுக்குக் காரணமாக இருந்ததே தவிர 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியில் இருந்தது போலவோ அல்லது அவுஸ்திரேலியாவில் ஒரு நாள் தொடரை தோனியின் தலைமையில் வென்ற பிறகு இந்திய அணி பெற்ற ஒரு நாள் தொடர், டெஸ்ட் தொடர் வெற்றிகளில் இருந்தது போலவோ ஒரு அணியாக இந்தியா சில மாதங்களாக இல்லை. சிறந்த ஒரு நாள் அணி என்று வெற்றியை வைத்துத்தான் கூறமுடிந்ததே தவிர ஒரு அணியாகத் திரண்டு எழுந்ததனால் என்று கூற முடியுமா?







கடைசி 10 ஒரு நாள் போட்டிகளில் இந்தியா 4 முறை எதிரணியினரை 300 ஓட்டங்களையும் அதற்கு சற்று கூடுதலாகவும் எடுக்க அனுமதித்துள்ளது. அவுஸ்திரேலியாவும் அன்று 300 ஓட்டங்களை எட்டியிருக்கும். இன்னும் 8 ஓவர்கள் மீதமுள்ள நிலையில் அந்த அணி 234 ஓட்டங்களை ஏற்கனவே எட்டியிருந்தது. காரணமென்ன பந்து வீச்சின் தரமின்மை. ஆனால், பாகிஸ்தானுக்கு எதிராக துடுப்பாட்ட வீரர்கள் சிலரின் தவறுகளினால் இலக்கை வெற்றிகரமாக துரத்தும் நிலையிலிருந்தும் முடியாமல் போனது.

ஆஷிஷ் நெஹ்ரா நீங்கலாக ஆர்.பி.சிங், இஷாந்த் ஷர்மா, ஹர்பஜன் சிங் ஆகிய முன்னணி பந்து வீச்சாளர்கள் இந்தியாவிற்கு வெற்றி வாய்ப்பை உருவாக்கும் பந்து வீச்சாளர்கள். மூளையைப் பயன்படுத்தாமல் பந்தை பூவாக நினைத்து துடுப்பாட்ட வீரர்கள் மீது அர்ச்சனை செய்வதுபோல் வீசியதுதான் பிரச்சினை.

பாகிஸ்தானுக்கு எதிராக அருமையாக வீசிய இஷாந்த் திடீரென இங்கும் அங்கும் வீசத் தொடங்கினார், கட்டுப்பாடு இழந்தார். ஷொய்ப் மாலிக் போன்ற அவ்வளவு ஒன்றும் அச்சுறுத்தல் இல்லாத துடுப்பாட்ட வீரர்கள் இஷாந்த் ஷர்மா போட்டுக் கொடுத்த 3 அதிர்ச்சிகரமான ஷோட் பிட்ச் பந்துகளினால் 3 பவுண்டரிகளை விளாசி ஆட்டத்தில் உறுதி பெற்றார்.

அவுஸ்திரேலியாவிற்கு எதிரான லீக் போட்டியில் அவுஸ்திரேலியா 8 ஓவர்களில் 23/1 என்று திணறிக்கொண்டிருந்த தருணத்தில் இஷாந்த் வந்தார். கொடுத்தார் 2 பவுண்டரிகளையும் ஒரு சிக்ஸரையும். 9 ஓவர்கள் முடிவில் 39 ஓட்டங்களை எட்டியது அவுஸ்திரேலியா. அதன் பிறகு ஓட்ட விதம் ஏறிக்கொண்டுதான் இருந்ததே தவிர இறங்கவேயில்லை.

இதே இஷாந்த் ஷர்மா ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு ரிக்கி பொண்டிங்கை ஒரு சாதாரண துடுப்பாட்ட வீரர் என்று கூற வைத்தார். மத்யூ ஹைடனை பிரச்சினைக்குள்ளாக்கினார். மைக்கேல் கிளார்க்கின் தாடைக்கு பந்து வீசினார். ஆனால், இப்போது... என்னவாயிற்று அவருக்கு?

ஒரு பந்து வீச்சாளர் ஏன் தன்னம்பிக்கை இழக்கிறார் என்ன காரணம் என்பதைக் கண்டுபிடித்து நிவர்த்தி செய்யத்தான் அவ்வளவு பெரிய தொகைக்கு பயிற்சியாளரை நியமிக்கிறார்கள். ஆனால், அவர் என்ன செய்துகொண்டிருந்தார்.

தன்னம்பிக்கை இல்லாத பந்து வீச்சாளரை ஏன் அணியில் தேர்வு செய்ய வேண்டும்? இர்பான் பதானையே அணியில் சேர்த்திருக்கலாமே? அல்லது முனாப் பட்டேலை அழைத்துச் சென்றிருக்கலாமே? கேரி ஹேஸ்டனின் பணி இதுதான் அவர் இதனை ஒழுங்காகச் செய்கிறாரா என்பதை கவனிக்க வேண்டியது அணித் தேர்வுக்குழுவின் பொறுப்பாகும்.

இவராவது இளம் வயது என்று வாய்ப்பு கொடுக்கலாம். ஹர்பஜன் சிங் பாகிஸ்தானுக்கும் அவுஸ்திரேலியாவுக்கும் எதிராக பந்து வீசிய விதம் மன்னிக்க முடியாதது: இந்த 2 போட்டிகளிலும் அவரது பந்து வீச்சு ஒன்றுமேயில்லை. பந்துகள் திரும்பவில்லை. 'பிளைட்' இல்லை. 'ஆர்க்' இல்லை. தூஸ்ரா ஷோட், பிட்ச்சாக முடிந்து போனது. இதனால் இந்தியாவுடன் மட்டுமே ஓட்டங்கள் எடுக்கும் யூசுப்பும் சொய்ப் மாலிக்கும் நன்றாக உறுதியடைந்தனர்.

இவ்வளவு ஆண்டுகள் ஆகியும் ஹர்பஜன் சிங் பந்து வீசி இந்திய அணியை வெல்லச் செய்வார் என்ற நம்பிக்கை அவர் மீது வர மறுக்கிறது. சீரற்ற ஒரு பந்து வீச்சாளராக இருக்கிறார். ஒன்று ஒரேயடியாக நன்றாக வீசுவது. இல்லையேல் படு சொத்தையாக வீசுவது. இந்த இரண்டு தீவிர நிலைதான் அவரிடம் உள்ளது.

இதற்காகத்தான் மாற்று வீரராக பிராக்யான் ஓஜாவை தேர்வு செய்திருக்க வேண்டும். ஹர்பஜன் சிங் பாகிஸ்தானுக்கு எதிராக வீசிய முறைக்காக அவர் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக அணியில் இடம்பெற்றிருக்கக் கூடாது. இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா போன்ற அணிகள் இப்படித்தான் யோசிக்கும். ஆனால் இவர்களுக்கெல்லாம் பாதுகாப்பு அளிக்கிறார்கள்.

ரெய்னா ஷோட் பீட்ச் பந்துகளுக்குத் திணறுகிறார் என்றால் அவரைத்தான் 3 ஆம் நிலையில் களமிறக்கி அந்தப் பந்துகளை எதிர்கொள்ள அவரைத் தயார்படுத்த வேண்டும். அப்படியல்லாமல் டிராவிட்டை களமிறக்கி ரெய்னாவை பின்னால் தள்ளுவது ரெய்னாவை பாதுகாப்பதாகும். இதனால் அவரது கிரிக்கெட் திறன் ஒரு போதும் மேம்படாது.

அதேபோல் ஹர்பஜன் சரியாகப் பந்து வீசவில்லையா உடனே அவரை நீக்க வேண்டும். இதுபோன்று செய்தால் இடம்பறிபோகுமென்ற பயத்திலாவது விட்டேத்தியாக வீசுவதை நிறுத்துவார். அல்லது உண்மையிலேயே பந்து வீச்சில் பிரச்சினையிருந்தால் அவரே பயிற்சி செய்ய கிளம்பிவிடுவார். ஆனால், என்ன செய்கிறார்கள்? இவர்களைப் பாதுகாக்கிறார்கள். எப்படி முன்னேற்றம் வரும்?

பயந்துகொண்டிருக்கும் அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்களெல்லாம் ஹர்பஜன் பந்துகளை மிகவும் எளிதாக ஓட்டங்களுக்கு விரட்டினர். காரணம் பந்து வீச்சில் ஒன்றுமேயில்லை என்பதால்தான்.

சமீபத்தில் பந்து வீச வந்த சயீத் அஜ்மல் இங்கிலாந்தின் கிரகாம் ஸ்வான் ஆகிய ஓவ்- ஸ்பின்னர்கள். கடினமாக பந்து வீசி வரும் நிலையில் நன்கு அனுபவம் பெற்ற முத்தையா முரளிதரனுக்கு பிறகு சிறந்த ஓவ்ஸ்பின்னரான ஹர்பஜன் சிங் தன் திறமைக்கேற்ப பந்துவீசவில்லையெனில் அவருக்கு தண்டனை அணியிலிருந்து நீக்கப்படுவது தவிர வேறு வழியில்லை.

ஒவ்வொரு முறையும் துடுப்பாட்டம் நன்றாக அமையுமென்று கூற முடியாது. பந்து வீச்சு உறுதியாக அமைந்து எதிரணியினரை 250-260 ஓட்டங்களுக்குள் மட்டுப்படுத்தினால்தான் பின்னர் இலக்கை துரத்துவது சாத்தியம். 5 போட்டிகளில் 3 போட்டிகள் 300 ஓட்டங்களுக்கும் மேல் வாரி வழங்கினால் எப்படி ஈடுகட்ட முடியும்?

இந்த ஐ.சி.சி.சாம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளிலிருந்து இந்தியா வெளியேறியது பெரியளவிற்கு ஏமாற்றமளிக்கவில்லை என்றாலும் கிரிக்கெட்டின் தரத்தை இழந்து விளையாடக் கூடாது என்ற பாடத்தை இந்திய அணி கற்றுக்கொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது. பயிற்சியாளர் கேரி ஹேஸ்டன் கப்டன் தோனி ஆகியோரது தேனிலவுக் காலகட்டம் முடிவுக்கு வந்துவிட்டது. இனிமேல்தான் இவர்கள் இருவருக்கும் வேலை அதிகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருநாள் போட்டியில் சாதித்த அணிகள்

20 ஓவர் (ருவென்ரி-20) கிரிக்கெட்டின் வருகையின் பின் ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் உத்வேகமும் அதிகரித்துள்ளது. ஒருநாள் போட்டியில் தற்போது 300 ஓட்டங்களை பெறுவதென்பது சர்வ சாதாரணமாகிவிட்டது.

'பவர்-பிளே' அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் ஒவ்வொரு அணியின் ஆட்டத்திலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதனால், 50 ஓவர் போட்டியில் 250 ஓட்டங்களுக்கும் குறைவாக ஒரு அணி பெறுகிறதென்றால் அதன் திறைமையை மிகவும் குறைத்து மதிப்பிடும் நிலையே ஏற்படுகிறது.

இந்த நிலையில், இவ்வருடம் நடைபெற்ற ஒருநாள் போட்டியில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்ற அணிகள் பற்றிய கண்ணோட்டமொன்றை இங்கு காணலாம். தென்னாபிரிக்காவில் தற்போது நடைபெறும் சாம்பியன்ஸ் கிண்ண போட்டியின் சில ஆட்டங்கள் வரை இவ்வருடத்தில் ஆகக் கூடுதலான ஓட்டங்களைப் பெற்ற அணிகளின் புள்ளி விபரங்களை இங்கு பார்க்கலாம்.

| அணி | ஓட்டம் | ஓவர் | ஓ.வீ. | இனிங் | எதிர் | மைதானம் | திகதி |
|---|---|---|---|---|---|---|---|
| இந்தியா | 392/4 | 50.0 | 7.84 | 1 | நியூஸிலாந்து | கிறிஸ்சேர்ச் | 8 மார்2009 |
| இந்தியா | 363/5 | 50.0 | 7.26 | 1 | இலங்கை | கொழும்பு (ஆர்.பி.எஸ்.) | 3 பெப்.2009 |
| சிம்பாப்வே | 351/7 | 50.0 | 7.02 | 1 | கென்யா | மொம்பசா | 29 ஜன.2009 |
| அவுஸ்திரேலியா | 345 | 50.0 | 6.90 | 1 | ஸ்கொட்லாந்து | எடின்போத் | 28 ஆகஸ்.2009 |
| இந்தியா | 339/6 | 50.0 | 6.78 | 1 | மேற்கிந்தியா | கிங்ஸ்ரன் | 26 ஜூன்2009 |
| நியூஸிலாந்து | 334 | 45.1 | 7.39 | 2 | இந்தியா | கிறிஸ்சேர்ச் | 8 மார்ச் 2009 |
| இந்தியா | 332/5 | 50.0 | 6.64 | 1 | இலங்கை | கொழும்பு (ஆர்.பி.எஸ்.) | 5 பெப்.2009 |
| இங்கிலாந்து | 328/7 | 50.0 | 6.56 | 1 | மேற்கிந்தியா | பெர்மிங்காம் | 26 மே 2009 |
| சிம்பாப்வே | 323/7 | 50.0 | 6.46 | 1 | பங்களாதேஷ் | பிளாவாயோ | 14ஆகஸ்.2009 |
| இங்கிலாந்து | 323/8 | 50.0 | 6.46 | 1 | தென்னாபிரிக்கா | சென்சூரியன் | 27செப்.2009 |
| பாகிஸ்தான் | 321/5 | 50.0 | 6.42 | 1 | இலங்கை | கொழும்பு (ஆர்.பி.எஸ்.) | 7ஆகஸ்.2009 |
| இலங்கை | 320/8 | 50.0 | 6.40 | 1 | இந்தியா | கொழும்பு(ஆர்.பி.எஸ்.) | 8பெப்.2009 |
| பங்களாதேஷ் | 320/8 | 50.0 | 6.40 | 1 | சிம்பாப்வே | பிளாவாயோ | 11ஆகஸ்.2009 |
| மேற்கிந்தியா | 319 | 48.1 | 6.62 | 2 | இந்தியா | கிங்ஸ்ரன் | 26ஜூன்2009 |
| இந்தியா | 319/5 | 50.0 | 6.38 | 1 | இலங்கை | கொழும்பு (ஆர்.பி.எஸ்.) | 14செப்.2009 |
| இலங்கை | 319/8 | 50.0 | 6.38 | 1 | தென்னாபிரிக்கா | செஞ்சூரியன் | 22செப்2009 |
| தென்னாபிரிக்கா | 317/6 | 50.0 | 6.34 | 1 | அவுஸ்திரேலியா | போட் எலிஸபெத் | 13ஏப்.2009 |
| நியூஸிலாந்து | 315/7 | 50.0 | 6.30 | 1 | இலங்கை | ஜொகனஸ்பேர்க் | 17 ஆகஸ்.2009 |
| பங்களாதேஷ் | 313/6 | 47.5 | 6.54 | 2 | சிம்பாப்வே | பிளாவாயோ | 27செப்.2009 |
| சிம்பாப்வே | 312/8 | 50.0 | 6.24 | 1 | பங்களாதேஷ் | பிளாவாயோ | 16 ஆகஸ்.2009 |
| இலங்கை | 309/5 | 50.0 | 6.18 | 1 | பாகிஸ்தான் | லாகூர் | 24ஜன.2009 |
| இலங்கை | 307/6 | 50.0 | 6.14 | 1 | இந்தியா | கொழும்பு (ஆர்.பி.எஸ்.) | 12செப்.2009 |
| சிம்பாப்வே | 306/7 | 50.0 | 6.12 | 1 | கென்யா | மொம்பசா | 27 ஜன.2009 |
| நெதர்லாந்து | 304/9 | 50.0 | 6.08 | 1 | பேர்முடா | போர்ச்பெஸ்ரோம் | 8ஏப்.2009 |
| அவுஸ்திரேலியா | 303/7 | 50.0 | 6.06 | 1 | தென்னாபிரிக்கா | ஜொகனஸ்பேக் | 17 ஏப்.2009 |
| அவுஸ்திரேலியா | 302/6 | 48.2 | 6.24 | 2 | இங்கிலாந்து | நொட்டிங்காம் | 15 செப்.2009 |
| பாகிஸ்தான் | 302/9 | 50.0 | 6.04 | 1 | இந்தியா | செஞ்சூரியன் | 26 செப்.2009 |
| அவுஸ்திரேலியா | 301/9 | 50.0 | 6.02 | 1 | நியூஸிலாந்து | சிட்னி | 8 பெப்.2009 |
| தென்னாபிரிக்கா | 301/9 | 50.0 | 6.02 | 2 | இங்கிலாந்து | செஞ்சூரியன் | 27 செப்.2009 |
| இங்கிலாந்து | 299 | 50.0 | 5.98 | 1 | அவுஸ்திரேலியா | நொட்டிங்காம் | 15செப்.2009 |
| அவுஸ்திரேலியா | 296/8 | 50.0 | 5.92 | 1 | இங்கிலாந்து | நொட்டிங்காம் | 17 செப்.2009 |
| ஆப்கானிஸ்தான் | 295/8 | 50.0 | 5.92 | 1 | ஸ்கொட்லாந்து | பெனோனி | 19 ஏப்.2009 |
| மேற்கிந்தியா | 293/9 | 50.0 | 5.86 | 1 | நியூஸிலாந்து | நேப்பியர் | 13 ஜன.2009 |
| இலங்கை | 290/8 | 50.0 | 5.80 | 1 | பாகிஸ்தான் | கராச்சி | 21.ஜன.2009 |
| இலங்கை | 289/4 | 46.3 | 6.21 | 2 | பாகிஸ்தான் | தம்புள்ள | 3ஆகஸ்.2009 |
| தென்னாபிரிக்கா | 289/6 | 50.0 | 5.78 | 1 | அவுஸ்திரேலியா | கேப்டவுன் | 9ஏப்.2009 |
| தென்னாபிரிக்கா | 288/6 | 50.0 | 5.76 | 1 | அவுஸ்திரேலியா | பேர்த் | 30ஜன.2009 |
| பாகிஸ்தான் | 288/8 | 50.0 | 5.76 | 1 | இலங்கை | தம்புள்ள | 3ஆகஸ்.2009 |
| கனடா | 287/4 | 48.4 | 5.89 | 2 | ஸ்கொட்லாண்ட் | அபெர்டீன் | 7ஜூலை2009 |
| அவுஸ்திரேலியா | 286/7 | 50.0 | 5.72 | 1 | தென்னாபிரிக்கா | டேர்பன் | 3ஏப்.2009 |
| ஸ்கொட்லாந்து | 286/4 | 50.0 | 5.72 | 1 | கனடா | அபெர்டீன் | 7ஜூலை2009 |
| சிம்பாப்வே | 285/8 | 50.0 | 5.70 | 1 | கென்யா | நைரோபி (ஜி.வை.எம்.) | 1பெப்.2009 |
| பாகிஸ்தான் | 279/8 | 50.0 | 5.58 | 1 | இலங்கை | கொழும்பு (ஆர்.பி.எஸ்.) | 9ஆகஸ்.2009 |
| இலங்கை | 277 | 46.4 | 5.93 | 2 | நியூஸிலாந்து | ஜொகனஸ்பேர்க் | 27 செப்.2009 |
| பங்களாதேஷ் | 276/[illegible] | 49.0 | 5.63 | 2 | மேற்கிந்தியா | றொஸ்யூ | 28 ஜூலை2009 |
| நியூஸிலாந்து | 275/4 | 50.0 | 5.50 | 1 | மேற்கிந்தியா | ஒக்லான் | 10ஜன.2009 |
| அவுஸ்திரேலியா | 275/8 | 50.0 | 5.50 | 1 | மேற்கிந்தியா | ஜொகனஸ்பேர்க் | 26 செப்.2009 |
| மேற்கிந்தியா | 274/6 | 50.0 | 5.48 | 1 | பங்களாதேஷ் | றொஸ்யூ | 28ஜூலை2009 |
| இந்தியா | 273/4 | 38.0 | 7.18 | 1 | நியூஸிலாந்து | நேப்பியர் | 3 மார்ச் 2009 |
| இலங்கை | 273 | 46.4 | 5.85 | 2 | இந்தியா | கொழும்பு (ஆர்.பி.எஸ்.) | 14 செப்.2009 |

## விளையாட்டு

## ரோஜர் பெடரர் விலகல்

உலகின் முதல் நிலை டெனிஸ் வீரர் ரோஜர் பெடரர் (சுவிற்ஸர்லாந்து) சமீபத்தில் நடந்த அமெரிக்க ஓப்பன் டெனிஸ் போட்டியில் இறுதியாட்டத்தில் ஆர்ஜென்ரீன வீரர் மார்ட்டின் டெல்போட்ரோவிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்தார். இந்த நிலையில், இம் மாதம் நடைபெறவிருக்கும் ஜப்பான் ஓப்பன் டெனிஸ் போட்டி மற்றும் ஷாங்காய் மாஸ்டர்ஸ் டெனிஸ் போட்டி ஆகியவற்றிலிருந்து விலகுவதாக பெடரர் தெரிவித்துள்ளார். ஓய்வு தேவை என்று டாக்டர் தெரிவித்த ஆலோசனையைத் தொடர்ந்து இந்தக் கடினமான விலகல் முடிவை எடுத்ததாக அவர் கூறியுள்ளார்.



## பாதுகாப்பு உத்தரவாதம் வழங்க முடியாது

பொதுநலவாய அமைப்பு நாடுகளின் கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் பாதுகாப்பு உத்தரவாதமில்லையென அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

கொமன்வெல்த் விளையாட்டு போட்டி டில்லியில் அடுத்த ஆண்டு அக்டோபர் மாதம் நடக்கிறது. இந்தப் போட்டியில் கலந்துகொள்ளும் அனைத்து நாட்டு வீரர்களுக்கும் உயர் மட்ட பாதுகாப்பு அளிக்கப்படுமென்று இந்தியா உறுதியளித்திருக்கிறது. இந்த நிலையில் கொமன்வெல்த் போட்டிக்கான பாதுகாப்பு குறித்து அவுஸ்திரேலிய தலைமை நிர்வாகி பெர்ரி கிராஸ்வெயிட் அளித்த ஒரு பேட்டியில்;

'எங்கள் நாட்டிலுள்ள அனைத்து விளையாட்டு அமைப்புகளுக்கும் வீரர்கள் டில்லியில் நடக்கும் கொமன்வெல்த் போட்டிக்கு செல்லலாமா? வேண்டாமா? என்பது குறித்து அவர்கள் முடிவு செய்ய முடியாது என்பதை சொல்லி விட்டோம். யாராவது சிலர் பாதுகாப்புப் பிரச்சினை இருப்பதாகக் கருதினால் போகமாட்டார்கள். நாங்கள் யாருடைய பாதுகாப்புக்கும் உத்தரவாதமளிக்க முடியாது. நாங்கள் செய்த சோதனையின் அடிப்படையில் பார்க்கையில் வீரர்களுக்கு பாதுகாப்பு அங்கிருப்பதாக தெரிகிறது' என்று கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய்யர்களை அடையாளம் காண்பதில் உங்களுக்கு சிக்கலா?



நாமோ எம்மைச் சுற்றியிருப்பவர்களோ பொய்கூறாமல் வாழ்கிறோம் என்று கூறமுடியாது. அனேகமாக சகலருமே சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்து பொய் சொல்லத் தான் செய்கிறோம். அதனால் தான் அரிச்சந்திரன் பட்ட கஷ்டங்களை நாம் அனுபவிக்காமல் இருக்கிறோமோ தெரியவில்லை. அரிச்சந்திரன் போன்று வாழ நினைக்கலாமே தவிர நடைமுறையில் வாழ்வது அனேகமாக முடியாத காரியமேயாகும்.

எம்முடன் வாழ்பவர்களில் எவராவது பொய்யைச் சொல்லிவிட்டால் நாமெல்லோரும் ஆத்திரப்படுகின்றறோம். ஆனால், நாம் என்ன பொய் சொல்லாமலா வாழ்கிறோம் என்று நினைத்துப் பார்க்கும் போது அந்த ஆத்திரம் அகன்று போய் விடத்தானே செய்கிறது. என்ன இருந்தாலும் பொய்யர்களைப் பற்றிநாம் நன்றாகத் தெரிந்து வைத்திருக்கவேண்டியது அவசியம் தானே.

அண்மையில் ஃபொக்ஸ் நியூஸின் இணையத்தளத்தில் பொய்யர்களை அடையாளம் காண்பதற்கான சில வழிவகைகள் வெளியிடப்பட்டிருந்தன.

*தாங்கள் சொல்லவேண்டியிருப்பதைப் பொய்யர்கள் ஒருபோதுமே மறக்கமாட்டார்கள். ஆனால், முரண்பாடான தகவல்களைக் கூறும் போது அவர்கள் தடுமாறுவார்கள்.

* பொய்யர்களை அவர்களின் உடல்மொழி (Body Language) மூலமாக அடையாளம் காண்பது சுலபம். எப்போதுமே அவர்கள் சஞ்சலப்பட்டவர்களாகக் காணப்படுவர். தலைமயிரை அடிக்கடி கையினால் வாரிக்கொண்டிருப்பார்கள். கழுத்தையும் அடிக்கடி தடவிக்கொண்டிருப்பார்கள். அதுமட்டுமல்ல கண்களைக் கசக்கிக்கொண்டுமிருப்பார்களாம். உங்களுக்கு முன்னால் நின்று அவர்கள் பொய் சொல்லிக் கொண்டிருப்பார்களேயானால் உங்களை நேருக்கு நேரே பார்ப்பதைத் தவிர்க்க உடலை அங்குமிங்கும் அடிக்கடி திருப்பிக்கொண்டிருப்பார்கள். கை, கால்கள் படபடத்துக்கொண்டிருக்கும். எதையாவது நீங்கள் உண்ணக்கொடுத்தால் அதை விழுங்குவதிலும் அவர்கள் கஷ்டப்படுவார்கள். ஒரு விடயத்தைக் கூறிவிட்டு உடனே தலையை ஆட்டிக்கொள்வார்கள். உங்களுடன் அவர்கள் கதைத்துக்கொண்டிருந்த விடயத்தை நீங்கள் மாற்றுவீர்களேயானால் அவர்களின் முகத்தில் மகிழ்ச்சி தோன்றும். தங்களை மறந்து பலமாகச் சிரிப்பார்கள்.

* நீங்கள் சந்தேகிக்கிறீர்கள் என்று ஏதாவது அறிகுறி தெரியும்பட்சத்தில் தங்களைப் பாதுகாப்பதற்காக முண்டியடித்துக்கொண்டு பொய்யர்கள் கதைக்கப்பார்ப்பார்கள். எப்போதுமே தற்காப்பு உணர்வு அதிகம். நீங்கள் அவர்கள் மீது சுமத்தும் எந்தவொரு குற்றச்சாட்டையும் உடனே உங்களை நோக்கி எறிவார்கள். பொய்யர்கள் எப்போதுமே கூடுதலாகக் கதைப்பார்கள். தங்களைப் பற்றி அதீதமாக விளக்கிக்கூறவேண்டிய தேவை அவர்களுக்கு உண்டு.

* பொய்யர்கள் தங்களின் நுண் உணர்ச்சி வெளிப்பாடுகளைக் கூட கட்டுப்படுத்த முடியாதவர்களாகத் தவிப்பார்கள். கைகளால் முகத்தை அடிக்கடி தொடுவார்கள் அல்லது மறைப்பார்கள். குற்ற உணர்வு வந்ததும் பொய்யர்கள் தங்கள் வாயைத் தொடுவார்கள். எப்போதுமே போலியான சிரிப்பு அவர்களின் முகத்தில் காணப்படும்.

மற்றையவர்களுக்கு இந்த குணங்குறிகளை நாம் பிரயோகிக்கும் போது எங்களுக்கும் அவர்கள் அவற்றைப் பிரயோகிப்பார்கள். எனவே, உண்மையைப் [illegible] பிரச்சினையுமே இல்லை.

# பற்றரிக்கு கார் தேவை



பென்சனியர் ஒருவர் நீண்டகாலமாக ஒரு காரை வைத்திருந்தார். அக்கார் மிகவும் பழுதாகிப் போய்விட்ட போதிலும் கூட, அவர் அதை கைவிட்டு விட்டு புதிய காரொன்றை வாங்கத் தயாராயில்லை.

பழைய காரை அடிக்கடி கராஜுக்குக் கொண்டு சென்று திருத்துவதற்கு பெரும்பணம் செலவாவதைப் பற்றிக் கூட அவர் கவலைப்படுவதில்லை. ஆனால் அவரின் காரை எண்ணற்ற தடவைகள் திருத்திய கராஜ் ஊழியர்கள் சலித்துப் போய்விட்டார்கள்.

மீண்டும் ஒருநாள் காரை கராஜுக்கு கொண்டுசென்ற பென்சனியர் திருத்தித்தருமாறு ஊழியர்களிடம் கேட்டார். அவரின் தொல்லையை இனிமேலும் பொறுத்துக்கொள்வதில்லை என்ற முடிவுக்கு வந்த ஊழியர்கள் 'பிரதான மெக்கானிக்தான் உங்களது காரை இனிமேல் திருத்துவார். அதில் உள்ள பிழைசரிகளை அடையாளம் காண்பதற்கான ஆற்றல் எம்மிடம் இனிமேல் இல்லை' என்று கூறிவிட்டனர்.

பிரதான மெக்கானிக் வரும் வரை காத்திருந்த பென்சனியர் அவரிடம் காரைத் திருத்தித் தரும்படி வற்புறுத்திக்கேட்டுக் கொண்டார். 'ஐயா உங்கள் காரில் உள்ள குறைபாட்டை போக்குவதற்கு மனம் வைத்தால் உங்களால் முடியும். இனிமேலும் கூட எங்களால் உங்கள் காரைத் திருத்தித் தர முடியுமென்று நான் நினைக்கவில்லை' என்று பிரதான மெக்கானிக் கூறினார்.

'என்னால் சீர்செய்யமுடியுமென்று நீங்கள் சொல்லும் அந்தக் குறைபாடு என்ன?' என்று பென்சனியர் திருப்பிக் கேட்டார்.

இதற்கு பிரதான மெக்கானிக் கூறிய பதில் என்ன தெரியுமா? 'ஐயா உங்கள் காரில் உள்ள பற்றரிக்கு புதிய கார் ஒன்று தேவைப்படுகிறது'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்.











பெய்ஜிங்கில் நடைபெற்ற சீனக்குடியரசின் 60ஆவது ஆண்டு நிறைவு கொண்டாட்டங்களில் இராணுவ அணிவகுப்பு







இந்தோனேசியாவின் சுமாத்திராவை இவ்வாரம் உலுக்கிய பூகம்பத்தின் விளைவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நொதேர்ண் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் யாழ்ப்பாணம், [illegible] அலுவலகத்தில் 2009 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 03 ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.